Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

..ங்கங்கள்-12

..தம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆடி-16 | 01-08-2005 | திங்கட்கிழமை | ஓசை-164



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

## ஆயுதக் கொள்வனவு, தளங்கள் விஸ்தரிப்பு, வெளிநாட்டு ஆலோசனைகள்

# ..யுத்தத்திற்கு அரசாங்கம் தயாராவதாக

# ..பொதுமக்கள் மட்டத்தில் சந்தேகம்!

(நமது நிருபர்)

..சிறிலங்கா அரசு நவீன ஆயுதத் தளபாடங்கள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளமையும் ..டத்தளங்களை விஸ்தரிக்கவும், புனரமைக்கவும் மேற்கொண்டுள்ள நடவடிக்கையும், ..நாட்டு இராணுவ ஆலோசகர்களின் வருகையும் சந்திரிகா அரசு யுத்தத்திற்கு தயாராவதாக ..ங்களை எழ வைத்துள்ளது.

..றிலங்கா விமானப்படைக்கென ..ந்த வாரத்தில் சீனாவிடமிருந்து ..மானங்கள், உலங்குவானூர்திகள் ..வற்றைக் கொள்வனவு செய்துள் ..தோடு, வேறு நாடுகளிலிருந்து சிறி ..ங்கா அரசு முப்படைகளுக்குமான ..யுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது.

இதே சமயம், யாழ்.குடாநாட்டி லுள்ள முக்கிய படைத்தளமான பலாலி விமானப்படைத்தளத்தின் புனரமைப்பு வேலைகள் தீவிரப்படுத்தப்பட் டுள்ளன. இதே சமயம் ஏனைய முகாம் களிலும் புனரமைப்பு வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இவை ஒருபுறமிருக்க வெளி நாட்டு இராணுவ ஆலோசகர்களும் விஜயங்களை மேற்கொண்டு கள முனைகளைப் பார்வையிடும் பணி களும் இடம்பெற்றுள்ளன. இதன் பிர காரம் அமெரிக்க கிழக்குப் பசுபிக் பிராந்திய கடற்படைத்தளத்திலிருந்து ஆறுபேர் கொண்டகுழு யாழ். குடா நாட்டிலுள்ள படைத்தளங்ளுக்கும் விஜயம் செய்து அங்குள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு தமிழ் இளைஞர்கள் கொழும்பில் வைத்துக்கைது

(கொழும்பு)

தமிழ் இளைஞர்கள் நான்கு பேர் நேற்று முன்தினம் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். பத்தரமுல்லயில் உள்ள சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு முன்னால் வைத்து ஒரு இளைஞர் கைது செய்யப்பட்ட அதேவேளை பத்தரமுல்ல செற்சிரிபாயவிற்கு முன்னால் வைத்து மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் பத்தரமுல்ல பொலிசார் தெரிவித்தனர்.

இது தவிர கறுவாத்தோட்டத்தில் உள்ள வெளிவிவகார அமைச்சர் லகஷ் மன் கதிர்காமரின் வீட்டிற்கு முன்னால் வைத்து இரு இளைஞர்களை கறுவாத் தோட்ட பொலிசார் கைது செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## ..பாராளுமன்ற உறுப்பினரின் வாகனம் மோதி பெண் பலி

(புத்தளம்)

..புத்தளம் மாவட்ட பாராளுமன்ற ..றுப்பினர் ரங்க பண்டார பயணம் ..ய்துகொண்டிருந்த வாகனம் ..தி பெண் ஒருவர் நேற்று பலியா ..ர்.

..இறந்தவர் மாரவில பிரதேசத்தை ..ர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட் ..ளது. இரணவில பிரதேசத்தில் இருந்து குமாமடுகல என்ற இடத்திற்கு பயணம் செய்துகொண்டிருந்த வாகனம் மோதியதாலேயே மேற்படி மரணம் சம்பவித்துள்ளது.

இதனையடுத்து பிரதேசவாசிகள் வாகனத்தை தாக்கமுற்பட்டபோது பொலிசார் அதனை தடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பலாலி வானூர்தி ஓடுபாதை ஐந்து மாதங்களுக்கு மூடப்படும்

(யாழப்பாணம்)

பலாலி வானூர்தி ஓடுபாதை ஐந்து மாதங் களுக்கு மூடப்படும் என வான்படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார். பலாலி வானூர்தித்தளம் புனரமைக்கப்படவுள்ளமையால் இந்த ஏற்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக குறிப்பிட்ட காலப்பகுதியில் தனி யார் பயணிகளின் வானூர்திகள் குறித்த ஓடுபாதையில் தரையிறங்க முடியாத நிலை ஏற்படுமென அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்திற்கு படையினரை ஏற்றியிறக்குவதற்காக இரண்டு எம் ஐ 26 ரக உலங்கு வானூர்திகள் இந்தியாவிடம் இருந்து வாடகைக்கு பெறப் படவுள்ளன.

பலாலி வானூர்தித்தள புனரமைப்புப் பணிகள் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் பணிகள் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர் புனரமைப்பு பணிகள் நிறை வடையும் வரை அங்கு வானூர்திகள் தரையிறங்கும் பணிகள் நிறுத்திவைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ..விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தி மட்டக்களப்பில் தேசிய எழுச்சி மாநாடு

(மட்டக்களப்பு)

தமிழினத்தின் விடுதலைக்கான அவசி யத்தை வலியுறுத்தி மட்டக்களப்பு மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஏற்பாட்டில் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு நாளை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ..வுள்ளது. பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாக ..வுள்ள இந்த மாநாட்டிற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மதத்தலைவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்களெனப்பெருந் திரளானவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் யாவும் தற்போது பூர்த்தியடைந்துள்ளதாக மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## பாதுகாப்புக்குறித்த அரசின் யோசனைக்கு புலிகளிடம் இருந்து பதில்கிடைக்கவில்லை

——கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுத லைப் புலி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் வழங்கிய புதிய யோசனைகள் குறித்து விடுதலைப் புலிகள் இதுவரை எவ்வித பதிலை யும் வழங்கவில்லை என கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் தலைமையில் கடந்த வாரம் முப்படை களின் தளபதிகள் மற்றும் சமாதான செயல கத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தில் சில புதிய யோசனைகள் தயாரிக்கப்பட்டதாகக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒலப்டொட்ரீ தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ..தேர்தல் ஆணையாளரின் உரிமை மீது அழுத்தம் செலுத்த எவருக்கும் உரிமையில்லை

### ஐ.தே.க. பிரதிப் பொதுச் செயலாளர்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர் ..தல் ஆணையாளருக்குள்ள சுயாதீன உரிமையில் அழுத்தம் செலுத்த எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. எதிர்வரும் 16 ஆம் திகதிக்குப் பின்னர் தேர்தல் ஆணையா ..ளர் தேவையான போதே சனாதிபதித் தேர்தலுக்கான திகதியைத் தீர்மானிக்க முடியுமென ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதிப்பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட போதே திஸ்ஸஅத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார். எதிர்வரும் 16 ஆம் திகதியின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் சனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிக்க தேர்தல் ஆணையாளர் அதிகாரம் பெறுகின்றார். அந்த உரிமையை யாரும் கையேற்க முடியாது. இந்த அதிகாரம் யாருக்குள்ளது? இந்த நாட்டு மக்களுக்கு அது குறித்து அதிகாரமுள்ளதாக எமது அரசியலமைப்பில் மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

தற்பொழுதுள்ள நிர்வாக முறைமையின்படி இந்த உரிமை மக்களின் இறைமையின்பாற்பட்டது. இது மக்களுக்குள்ள தேர்தல் உரிமையாகும்.

மக்கள் தான் இங்கு உயர் இடத்திலுள்ளனர். மக்களுக் குள்ள வாக்குரிமையை மாற்றுவதற்கு அரசியல் அமைப்பில் இடமில்லை என அவர் தெரிவித்தார்.

## நெளுக்குளத்தில் பேருந்து விபத்து; பதினேழு பேர் படுகாயம்

(வவுனியா)

வவுனியாநெலுக்குளம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 17 பேர் படுகாயமடைந்து வவுனியா பொதுமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் இருந்து வந்த இரண்டுபேருந்துகளில் முன்னேவந்த வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான பேருந்து தரிப்பிடம் ஒன்றில் நின்று மக்களை இறக்கியபோது பின்னால் வந்த மன் னார் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறு வனத்திற்கு சொந்தமான பேருந்து மோதி யதால் இரண்டு பேருந்துகளிலும் வந்த பிரயாணிகள் 16 பேரும் ஓட்டு நர் ஒருவரும் காயமடைந்தனர்.

வி.ராஜலட்சுமி, கே.வைரத்தா, எஸ்.சிங் கராஜா எஸ்.நிஷாந்தி எஸ்.செபமாலை, ஐ.ஜேசுராஜ், கபீலகுலசேகர, பி.இராசப் பிள்ளை பி.கலையம்மா எஸ்.செல்லம்மா

(12ஆம்பக்கம் பார்க்க)

### வாசகர் கவனத்திற்கு...

ஈழநாதம் நாளேட்டின் விலை இன்றுமுதல் ரூபா 10.00 (பத்து) ஆக இருக்கும் என்பதனை வாசகர் களுக்கு அறியத் தருகின்றோம்.

**வரிவிளம்பரம்**

**கடை விற்பனைக்கு**

கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கும், சக்சேரிக்கும் இடையில் கிணறு, மலசல கூட வசதியுடன் கடை விற்பனைக்கு உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவர்:- வன்னியன பல் பொருள் வாணிபம், கச்சேரி முன்பாக (பிரபா) கிளிநொச்சி. T.P.021.2285776. (6506)

**கணனி வேலைக்கு ஆள்தேவை**

Adobe Photo Shop வேலை தெரிந்த நிரந்தர, பகுதி நேர வேலைக்கும் இதில் ஆர்வமுடன் பழகவிரும்புபவர்களும் சுய விபரக் கோவையுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். யாழ் ஒளி (K.S.R PHOTOS) இல.05, கனகபுரம் தெரு. கிளிநொச்சி (சந்தைக்கருகில்) (6397)


# தீவகத்திற்கு திருப்தியான சேவையை வழங்க பேருந்து பற்றாக்குறை பெரும் பிரச்சினை

## வ.பி.போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திற்குத் திருப்திகரமான போக்குவரத்துச் சேவைகளை நடத்துவதற்கு பேருந்து பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகவுள்ளதென வட பிராந்தியப் போக்குவரத்துச்சபை பொதுமுகாமையாளர் கே.கணேச பிள்ளை தெரிவித்துள்ளார்.

தீவகத்தின் பலபகுதிகளுக்கும் திருப்திகரமான பேருந்துப்போக்குவரத்து சேவை நடத்தப்படுவதில்லையென பொதுமக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். அத்துடன்தீவகத்தின் பல இடங்களுக்கும் பேருந்து சேவையை நடத்துமாறும் கோரிக்கை விடுத்த வண்ணமுள்ளனர்.

இத்தகைய, மக்களது தேவைப் பாடுகளை கவனத்தில் எடுத்து தீவகப் பகுதிக்கு திருப்திகரமான பேருந்துச் சேவையை நடத்தபோதியளவு பேருந்துகள் இல்லாமை பெரும் பிரச்சினையாக உள்ளது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலைமைகள் காரணமாக பொதுமக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். யாழ்.மாவட்டத்தில் நிலவும் பேருந்து தேவைப்பாடுகள் பற்றி கோரிக்கை விடுத்தபோதும் அரசு உரியநடவடிக்கையை எடுக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (33)

# நாவாந்துறைப் பகுதியில் தண்ணீர் தாங்கி நிறுவப்படும்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப்பகுதியில் தண்ணீர் தாங்கி ஒன்று நிறுவப்படவிருப்பதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாவாந்துறைப்பகுதிக்கு யாழ். நகர் பிரதான தண்ணீர் தாங்கியில் இருந்தே குடிநீர்குழாய் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நாவாந்துறை மக்கள் முற்றுமுழுதாக குழாய்மூலமான குடிநீர் விநியோகத்தையே நம்பி இருப்பதினால் பிரதான தாங்கியின் நீர்கொள்ளளவு இப்பகுதி மக்களின் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யப்போதாதுள்ளது.

அத்துடன் மக்களின் தேவைப் பாட்டிற்கேற்ப நீர்வழங்கல் குழாய்கள் செல்லும்பாதைகளும் அமைந்திராததினால் இப்பகுதி மக்கள் தமக்கான குடிநீரை திருப்திகரமாக பெற முடியாத நிலைகாணப்படுகிறது.

இதனைக் கவனத்தில் கொண்டே நாவாந்துறையில் தனியான ஓர் தண்ணீர் தாங்கியை நிறுவி அதன் மூலம் அப்பகுதி மக்களின் குடிநீர் தேவையைப்பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (33)

# யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களில் தமிழ்மொழிக்கு உரிய இடம்வழங்கப்பட வேண்டும்

## -யாழ்.அரசஅதிபர் வலியுறுத்து

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களங்களிலும் தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்கப்படுவது அவசியம் என்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் சகல திணைக்கள தலைவர்களிடமும் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள அரச திணைக்கள கருமங்களில் சிங்கள மொழியின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. அரசினால் அனுப்பப் படும் படிவங்கள், சுற்றுநிருபங்கள் கூட தனிச்சிங்களத்தில் அனுப்பப்படுகின்றன. இதனால்மக்களும் திணைக்கள உத்தியோகத்தர்களும் விண்ணபப்படிவங்கள், சுற்றுநிருபங்கள் என்பவற்றில் உள்ளவற்றை வாசித்து விளங்கிக் கொள்ள முடியாது அவஸ்தைப்படுகின்றனர்.

தமிழ்மக்களும், தமிழ் இன அதிகாரிகளையுமே முற்றுமுழுதாக கொண்ட யாழ்.மாவட்ட அரச திணைக்களங்களுக்கு சிங்களத்தில் படிவங்களையும் சுற்றுநிருபங்களையும் அனுப்பி அவற்றை வாசித்தறிய நிர்ப்பந்திப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தனது தாய்மொழியைவிட்டு பிறமொழியை திணிப்பது என்பது மொழிஉரிமை மீறலின் உச்சம் என்பதால் யாழ். மாவட்டத்திலுள்ள சகல திணைக்கள தலைவர்களும் தமது திணைக்களத்தில் தமிழ்மொழியின் தனித்துவத்தையும், கௌரவத்தையும் பேணி செயற்படுவது அவசியமென அரசஅதிபர் கணேஷ் மேலும் வலியுறுத்தியுள்ளார்.(33)



கெயார் நிறுவனத்தின் நிதியுதவியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட வீச்சுத்தொழிலாளர்களுக்கு முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைவர் அ.மரியராசா வலைகளை கையளிப்பதனைப் படத்தில் காணலாம். (படம்:சகிலா)

# ஐந்தாம் தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

ஐந்தாம் தரபுலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு பரந்தன் இந்துமகாவித்தியாலயத்திலும், 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்தியகல்லூரியிலும் நடைபெற்றன.

கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர், மற்றும் நமது ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு உரைகளை நிகழ்த்தியதையடுத்து மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தமர்வு ஆரம்பமானது.

இக்கருத்தமர்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் ஐந்தாம்தர மாணவர்கள் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.


**பிற்போடப்பட்டுள்ளது**

அற்புதவிநாயகர் ஆலயம் இளங்கோபுரம் விசுவமடு-ஆலய வளர்ச்சிக்கான அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவு 25.07.2005 நடக்க இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் நடாத்த முடியவில்லை. சீட்டிழுப்பு முடிவுநாள் பின்னர் அறிவிக்கப்படும். பரிபாலன சபையினர். (6508)


# அராலி–முத்தமிழ் கிராமத்தில் அபிவிருத்தி நடவழக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அராலி மேற்கில் உள்ள முத்தமிழ் கிராமம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழான நிதியுதவியுடன் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதற்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 80 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இக்கிராமத்தில் வாழும் மக்களின் சமூக, பொருளாதார,கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்த 80 மில்லியன் ரூபாவும் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்நிதியில் இருந்து சுயதொழில் ஊக்குவிப்பு,சமூகநிறுவனங்களை புனரமைத்தல், முன்பள்ளிகளைப் புனரமைத்தல், வாழ்விடங்களைப் புனரமைத்தல் எனப்பல்வேறு பணிகளும் செய்யப்படவுள்ளன.(33)

# காசநோய் வைத்தியசாலை இம்மாத இறுதியில் திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணைப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் காசநோய் வைத்தியசாலை இம்மாதம் 30 ஆம் திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவிருக்கிறது.

வடக்கில் காசநோய் சிகிச்சைகளைத் திருப்திகரமாக வழங்குவதற்கு ஏற்றவைத்தியசாலை ஒன்று இல்லாமையால் இப்பகுதிகளில் உள்ள காசநோயாளர்கள் தமக்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத அவலநிலை காணப்பட்டு வந்தது.

இந்த நிலைமைகளை கவனத்தில் கொண்டு உலகவங்கியின் 18.7 மில்லியன் ரூபாநிதியுதவியில் யாழ்.பண்ணைப்பகுதியில் காசநோய் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையின் கட்டட நிர்மாணப்பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருவதாக பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறினார். (33)

# இளவாலை வடக்கில் 33 வீடுகள் அமைப்பு

யாழ்.இளவாலை வடக்கில் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் ஏற்பாட்டில் 33 வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் வீடுகளை இழந்த அல்லது வீடுகள் சேதமாகிப் போனவர்களுக்காகவே இம் 33 வீடுகளும் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன என தெல்லிப்பழைப் பிரதேசசெயலாளர் கூறினார்.

இவ்வீடமைப்புத்திட்டத்துக்கான பயனாளிகள் பாதிப்புகளுக்கு ஏற்ப முன்னுரிமைப்படுத்தப்பட்டே திட்டத்தினுள் உள்வாங்கப்படவிருப்பதாகவும், இப்பயனாளிகள் தெரிவின் போது வீட்டுப்பாதிப்பு, குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை. பொருளாதார நிலைமை என்பன கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கூறினார். (33)


**சாவு அறிவித்தல்**

**சிறிவரதன் சேதுராமலட்சுமி**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், மருந்துபால்மா வகைகளின் நீண்டகாலப் பணியாளருமான சிறிவரதன் சேதுராமலட்சுமி சாவடைந்துள்ளார். இவர் சிறிவரதனின் அன்புமனைவியும், மாணிக்கம்பிள்ளை மங்களேஸ்வரியின் புதல்வியும், கனகராசா ராணிஅம்மாவின் மருமகளும், லதா, பவானி, மாவீரர்களான பூவாளன், பசுபதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் போராளி எழில்வேந்தினியின் சிறியதாயாரும், மகாதேவன், போராளி அகமன்னன், மீரா, சிவராசா, மாவீரரான சுரேந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆசிரியர் விஜிதா, முந்தன் ஆகியோரின் சகலியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 01.08.2005 (இன்று) அவரது சிலாவத்தை இல்லத்தில் இருந்து பி.ப 3.00 மணிக்கு சிலாவத்தை இந்துமயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
பணிப்பாளர்,போராளிகள்,பணியாளர்கள்,
மருந்து பால்மா வகைகள்,
நடுவப்பணிமனை-புதுக்குடியிருப்பு. (6407)


# சதாம் மர்ம மனிதர் கைகலப்பு நீதிமன்ற வளாகத்தில் பரபரப்பு

(அம்மான்)

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜராகி இருந்த போது அவரை மர்ம மனிதர் ஒருவர் தாக்கிய தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1991 ஆம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தில் குர்திஷ் மற்றும் ஷியா முஸ்லிம்கள் நசுக்கப் பட்டதாக ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைன் மீது பாக்தாத் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்காக சதாம் ஹுசைன் நீதிமன்றிற்குச் சென்றிருந்தார். அவருக்காக அவரது சட்டத்தரணி கலீல் துலாய்மி வாதாடிக் கொண்டிருந்தார். விசாரணை முடிந்ததும் சதாம் ஹுசைன் அறை யில் இருந்து வெளியேறத் தயாரான்போது அங்கு நின்று கொண்டிருந்த ஒரு மர்ம மனிதர் ஹுசைனை தாக்கினார் இதை சதாம்ஹுசைன் சற்றும் எதிர்பார்க்க வில்லை. பின்னர் அவரும் அந்த மர்ம மனிதரை தாக்கியுள்ளார்.



இந்தச் சண்டையை நிறுத்த நீதிபதியோ, அங்கு கூடியிருந்த வர்களோ முயற்சி செய்யவில்லை. இந்தச் சண்டையில் சதாம் ஹுசைன் காயம் அடைந்தாரா என்ற விவர மும் தெரியவில்லை.

சதாம் ஹுசைன் ஆதரவு சட்ட நிபுணர்கள் குழு ஜோர்டான் தலைநகர் அம்மானில் இருந்து இந்தத் தகலை வெளியிட்டுள்ளனர்.

ஆனால் இந்தத் தகவலை அமெரிக்கா மறுத்துள்ளது. சதாம் ஹுசைன் அமெரிக்க இராணுவத்தின் பாதுகாப்பில் தான் உள்ளார். அவரை யாரும் தாக்கவில்லை. நீதிமன்று அறையில் தாக்குதல் சம்பவம் ஏதும் நடக்க வில்லை என்று அமெரிக்க இராணுவத் தளபதி கிறிஸ்டிமில்லர் தெரிவித்துள்ளார்.

# யாருடைய வற்புறுத்தலுக்கும் பாகிஸ்தான் அடி பணியாது

பாகிஸ்தானின் இராணுவ பலத்தை யாராலும், குறைக்க முடியாது. இதற்காக யாருடைய வற்புறுத்தலுக்கும் பாகிஸ்தான் அடி பணியாது. அணுவாயுத ஏவுகணை சோதனையை நாங்கள் நிறுத்த மாட்டோம். மேலும் அணு வாயுத சோதனைகள் தொடரும்.

இவ்வாறு முஷாரப் கூறினார்.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதி யில் இராணுவத்தினர் சார்பில் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் அதிபர் முஷாரப் கலந்து கொண்டு பேசிய போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.


முஷாரப்

# பலியானோர் தொகை 40 ஆக உயர்வு

(மொசூல்)

ஈராக்கில் மொசூல் நகரில் இருந்து 80 கிலோ மீற்றர்தொலைவில் இருக்கும் ரபியா நகரில் உள்ள நகரசபை கூட்டத்தில் ஆள் தேர்வு பணி நடந்துகொண்டிருந்த போது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஆக உயர்ந்துள்ளது. 57 பேர் பலத்த காயமடைந்துள்ளனர்.

# எங்களை வெளியேற்றாதீர்கள் வெளிநாட்டு மாணவர்கள் கோரிக்கை

(இஸ்லாமபாத்)

**ஒரு சிலர் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்காக எங்களை வெளியேற்ற வேண்டாம் என பாகிஸ்தானில் கல்வி பயிலும், வெளிநாட்டு மாணவர்கள் முஷாரப்பை கேட்டுள்ளனர்.**


பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமிய பள்ளிக ளில் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். மதரசாக்கள் என்று அழைக்கப்படும் இந்தப் பள்ளிகளில் சிலவற்றில் தீவிரவாதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக புகார்கள் எழுந்தன. லண்டன் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளும் பாகிஸ்தானில் உள்ள இந்தப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்கள் என்று விசாரணையில் தெரியவந்தது.

இதைத் தொடர்ந்தே இந்த வெளிநாட்டு மாணவர்களை வெளியேற்ற அதிபர் முஷாரப் உத்தரவிட்டுள்ளார். 1400 வெளிநாட்டு மாண வர்கள்வெளியேற்றப்படுகிறார்கள். இதற்காக அவசரசட்டம் பிறப்பிக்கப்படும் என்றும் முஷாரப் அறிவித்தார்.

இதையடுத்து வெளிநாட்டு மாணவர்கள் அதிபர் முஷாரப்புக்கு கோரிக்கை மனு அனுப்பி யுள்ளனர். அந்த மனுவில் அவர்கள் கூறியிருப் பதாவது " நாங்கள் இஸ்லாம் பற்றி படிக்கவே வந்திருக்கின்றோம். தீவிரவாத செயல்களில் நாங்கள் ஈடுபட மாட்டோம். ஒரு சிலர் தீவிரவாத செயல்களில் ஈடுபடுவதற்கு நாங்கள் பொறுப் பல்ல.

எங்களை வெளியேற்றாதீர்கள். வெளிநாட்டு மாணவர்களை வெளியேற்றும் திட்டத்தை கைவிட வேண்டும் எனஅந்த மனுவில் அவர்கள் கூறியுள்ளனர்.


மேற்கு பாக்தாத்தில் உணவு விநியோக ரக் வண்டி மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத் தில் ஒரு அமெரிக்க இராணுவ வீரர் புகைப்படப் பிடிப்பாளர்களிற்கு சைகை காட்டுகின்றார்.


நேற்று முன்தினம் பாக்தாத்தில் வீதியோரக் குண்டுத் தாக்குதலிற் குட்பட்டு எரிந்த உணவு விநியோக ரக் வண்டி ஒன்றிற் கருகாமையில் ஒரு அமெரிக்க இராணுவ டாங்கி காவற் கடமையில் ஈடுபட்டுள்ளது.

# வானியல் ஆராய்ச்சி துறையில் புதிய அத்தியாயம் சூரியக் குடும்பத்தில் பத்தாவது புதிய கிரகம்

(லொஸ்ஏஞ்சல்ஸ்)

சூரியக்குடும்பத்தில், பத்தாவது புதிய கிரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது பூமியிலிருந்து 900 கோடி மைல் தூரத்தில் அந்தக் கிரகம் உள்ளது என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சூரியக் குடும்பத்தில் கடைசியாக கண்டு பிடிக்கப்பட்ட ஒன்பதாவது கிரகம் 'புளூட்டோ' கடந்த 1930 ஆம் ஆண்டு இந்தக் கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று சூரிய குடும்பத்தில் ஒன்பது கிரகங்கள்தான் என்று நிலை பெற்று இருந்தது ஆனால், அமெரிக்காவின் கலிபோர்னியா தொழில்நுட்ப அறிவியல் நிலையத்தை சேர்ந்த வானியல் நிபுணர் .மைக்பிரவுன் என்பவர் சூரிய குடும்பத்தில் பத்தாவ தாக புதிய கிரகம் ஒன்றை கண்டு பிடித்து வானியல் ஆராய்ச்சித் துறையில் புதிய அத்தியாயம் படைத்திருக்கிறார்



கிரகங்கள் பற்றி ஆய்வு செய்து வரும் பேராசிரியர் மைக் பிரவுன் தனது புதியகண்டுபிடிப்பு பற்றி நிருபர்களிடம் கூறிய தாவது:

"தற்போது 2003 யுபி 313 "என்று அழைக்கப்பட்டு வரும் பத்தாவது கிரகத்துக்கு விரைவில் புதிய அறிவியல் பெயர் சூட்டப்படும் இது 'புளூட்டோ' வை விட ஒரு மடங்கு பெரியது மீத்தேன் வாயுவால் சூழப்பட்டுள்ள இது பூமியில் இருந்து ஏறத் தாழ 1,500 கோடி கிலோ மீற்றர் (900 கோடி மைல்) தூத்தில் உள்ளது சூரியனுக்கும் புதிய கிரகத்துக்கும் உள்ள தூரம் இதைப்போல் 97 மடங்கு அதிகமாகும் சூரியக் குடும்பத்தின் தொலைதூரக் கிரகம் இதுதான். இவ்வாறு பேராசிரியர் மைக் பிரவுன் கூறினார்.

## லண்டன் குண்டு வெடிப்புக்கு மூளையாக இருந்தவர் பின்லேடனுக்கு காவலாளியாக இருந்தவராம்

(லண்டன்)

லண்டன் குண்டு வெடிப்புச் சதிக்கு மூளையாக இருந்து திட்டம் வகுத்துக் கொடுத்தவர் ஓசாமா பின்லேடனுக்கு காவலா ளியாக வேலை பார்த்து அதன் பிறகு அல்ஹைறதா இயக்கத் தலைமை அலுவலக உத்தரவுப் படி தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டவர் எனத் தெரியவந்துள்ளது.

அந்தத் தீவிரவாதியின் பெயர் ஆருன் ருஷீத் அஸ்வாத் எனவும் இவரது பெற்றோர் முன்பு இந்தியாவில் வசித்து வந்தனர். எனவும் பின்னர் லண்டன் அருகே யார்க்ஷைர் நகரில் குடியேறி னார்கள் என்றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## அவுஸ்திரேலியாவில் பாதுகாப்பு அதிகரிப்பு

(மெல்பேர்ன்)

லண்டன் குண்டுவெடிப்புச் சம்பவத்தை தொடர்ந்து அவுஸ்தி ரேலிய அரசாங்கம் பாதுகாப்பைஅதிகரிக்க திட்டமிட்டுள்ளது. சிட்னி, மெல்பேர்ன், கான்பரா உட்பட முக்கிய நகரங்களில் விசேட இராணுவப்படை மற்றும் கமாண்டோ வீரர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

மேலும் இரண்டு உலங்குவானூர்திகள் மூலமும் ரோந்து பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்தத் தகவலை அவுஸ்திரேலிய இராணுவ அமைச்சர் ராபர்ட்ஷில் தெரிவித்தார்.



லண்டன் குண்டுத் தாக்குதலையடுத்து மூன்று சந்தேக நபர்களை விசாரணைக்குட்படுத்தியதோடு பரவலாக்கப்பட்ட பயங்கர வாதத் தாக்குதலை முறியடிக்கும் முயற்சியில் தெற்கு லண்டன் நிலக்கீழ் புகையிரதப் பாதையில் வெளியே பொலிசார் காவற் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

## சீனாவில் சூறாவளி 15 பேர் பலி

கிழக்கு சீனாவில் உள்ள அன்குய் மாகாணத்தின் லிங்பியில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றில் சிக்கி 15 பேர் பலியானதாக சீன அரசு தெரிவித்துள்ளது. மேலும் சூறாவளிக் காற்றில் ஏராளமான கட்டடங்கள் சேதமடைந்தன.

## நைகருக்கான உணவு நிவாரணத்தை மும்மடங்காக அதிகரிக்க பிரான்ஸ் திட்டம்

(பரிஸ்)

நைகருக்கான உணவு நிவாரணத்தை மும்மடங்காக அதி கரிக்கப்போவதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

பஞ்சம் காரணமாக இறக்கும் நிலையிலிருக்கும் ஆயிரக் கணக்கான சிறுவர்களுக்கு உதவுமாறு 4.6 மில்லியன் யூரோக்களை இந்த வருடம் வழங்க உள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது. நைகரில் வரட்சி மற்றும் வெட்டுக்கிளிகளின் தாக்கத்தால் பயிர்கள் அழிந்துள்ளன. இதே வேளை உலகி லேயே மிகவும் வறிய நாடுகளில் ஒன்றான நைகரில் வாந்திபேதி உட்பட பல்வேறு நோய்த்தொற்றுக்களின் தாக்கமும் ஏற்பட் டுள்ளது.

பிரான்ஸ் சனாதிபதி இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கை யில்: உலக விவசாய ஸ்தாபனத்திற்கான அதன் உதவியையும் இரட்டிப்பாக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். மிகவும் மோச மாகப் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில் பாடசாலை வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒருகோடி யூரோக்கள் பயன்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை நைகரில் இடம் பெறும் நிவாரண நடவடிக்கைகளை கண்காணிக்கவும் மேலும் உதவி தேவைப்படுகிறதா என்பதை அறிந்து கொள்வதற்கென பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் அங்கு சென்றுள்ளார்.

# கிளி - கனகபுரம் வீதிக்கு மின்சாரம் இன்னுமில்லை

# நிவர்த்திக்கக்கோரி அரச அதிபருக்கு மகஜர்

(அலுவலக செய்தியாளர்)

*கிளிநொச்சி கனகபுரம் வீதிக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையின் காரணமாக அப்பகுதி வர்த்தக நிலைய உரிமையாளர்கள் முதல் பொதுமக்கள் வரை விசனம் தெரிவித்துள்ளனர். இது குறித்து கிளி அரச அதிபருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*

கிளிநொச்சி ஏ 9 பிரதான வீதிக்கு அடுத்த நிலையில் போக்குவரத்து நிறைந்து காணப்படும் வீதியாக கனகபுரம் வீதி அமைந்துள்ளதுடன், கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுச்சந்தை முதல் வர்த்தக நிலையங்களும் அதிகளவில் மேற்படி வீதியில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் மேற்படி வீதியினை அண்மித்த கிராமங்களில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த இருமாதங்களுக்கு முன்பாக இவ்வீதியில் குறிப்பிட்ட தூரத்திற்கு மின்சார சபையினரால் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ள பொழுதிலும் அதற்குரிய மாபிள், கேபிள் என்பன எப்பொழுது கிடைக்கப்பறெவுள்ளதென தெரியவில்லையென சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனரெனவும் கனகபுரம் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே தங்களிற்கு ஏற்பட்டுள்ள இந்த அவலநிலையினை நிவர்ததி செய்யும் வகையில் சம்பந் தப்பட்ட நிறுவனங்களுக்கு பணிப் புரை வழங்கி மின்சாரம் கிடைக்க வழி செய்யுமாறு கனகபுரம் வீதி வர்த்தகர்களின் கையொப்பமடங்கிய மகஜரினை கிளிநொச்சி அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளனர். (சோ)

## வட்டக்கச்சிப்பிரதேசத்தில் பாடசாலை மட்டக்கண்காட்சி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் பாடசாலை மட்டத்திலான கண்காட்சி நடைபெற்று வருகின்றது. கடந்த வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை பொ. விஜயநாதன் (ஆசிரிய ஆலோசகர் ஆரம்பக்கல்வி) முருகானந்தா மகா வித்தியாலய முதல்வர் க. மதுரநாயகம் சைவசமய ஆசிரிய ஆலோசகர் திருமதி சிவனொளிபாதம் ஆகியோர் ஏற்றினர். தேசியக்கொடியினை இராமநாதபுரம் கிழக்கு அ. த. க. பாடசாலை முதல்வர் புண்ணிய மூர்த்தி ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்துஆரம்பக்கல்விக் கண்காட்சி மண்டபத்தினை கண்டாவளை கோட்டக்கல்வி அதிகாரி வி. ராஜகுலசிங்கமும் இடைநிலை மாணவர் கண்காட்சி மண்டபத்தினை ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கௌ-சந்திரசேகரமும் திறந்து வைத்ததோடு கண்காட்சி பார்வைக்கு விடப்பட்டது.



படம்:-ரூபன்

இப்பாடசாலை மட்டக்கண்காட்சியில் இருந்தும் ஒவ்வொரு பாடசாலையிலும் முதல் ஐந்து கண்காட்சிப்பொருட்கள் தெரிவு செய்யப்பட்டு கோட்டமட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## வங்காலை புனித அன்னம்மாள் தேவாலய 125 ஆவது ஆண்டுவிழா

மன்னாரில் மிகவும் பிரசித்திபெற்ற வங்காலை புனித அன்னம்மாள் தேவாலயத்தின் 125 ஆவது ஆண்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை வங்காலையில் மிகவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அன்றைய தினம் மன்னார் ஆயர் இராயப்பு யோசப்ஆண்டகையும் மன்னார் மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தையும் ஏனைய குருக்களும் இணைந்து திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுத்தனர்பூசை முடிவில் அண்ணையின் ஊர்வலம் இடம்பெற்றது. 125 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மலர் வெளியீடும் இடம்பெற்றது. அதன் பின்னர் வங்காலை ஆலய மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலையரங்கமும் ஆயர் யோசப்பு ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. பின் இரவு புதிதாக திறந்து வைக்கப்பட்ட கலையரங்கில் வங்காலை, கலை கலாச்சார மன்றங்களின் கலைநிகழ்வும் இடம்பெற்றது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் வங்காலை பங்குத்தந்தை மேற்கொண்டிருந்தார். (18)

## சாரணியதினம்

சுதந்திரபுரம் அ. த.க. பாடசாலை சாரணிய மாணவர்களின் சாரணிய பாசறை நிகழ்வு கடந்த 25,26, 27 ஆம் திகதிகளில் நடைபெற்றது. சாரணியப்பொறுப்பாசிரியர் சு.சுதாகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் சாரணியத்தின் சிறப்புத் தொடர்பாக மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர் வே. ஜெயம் சபாபதி கருத்துரை வழங்கினார். இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள்,பெற்றோர்கள் பழைய மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## கூட்டங்கள்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாதாந்தம் முதலாவது செவ்வாய் கிழமையில் இடம்பெறும் கல்விக்குழு, சுகாதாரக்குழுக் கூட்டங்கள் வழமைபோல நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென கிளி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

## நுளம்புவலை வழங்கல்

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடனும் சர்வோதய நிறுவன நிதியுதவியுடனும் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் முள்ளியவளைப்பிரதேசத்தில் நுளம்பு வலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முள்ளியவளைப்பிரதேசத்தில் முல்லைஅகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட சகல கிராம மக்களுக்குமான நுளம்புவலைகள் கிராம சேவையாளர் பிரிவுகள் ஊடாக வழங்கப்பட்டு வருவதாக மேற்படி கழக சமூக நல திட்ட இணைப்பாளர் திருமதி லங்கா தேவி தெரிவித்துள்ளார். (ஆ)

## இராணுவம் அமைத்த மண்அணைகள் வடமராட்சி கிழக்கில் அகற்றல்

வடமராட்சி கிழக்கில் அரசடி இடைத்தங்கல் முகாமின் பின்புறத்தில் நீளமாக வத்திராயன் கடற்கரையிலிருந்து ஆழியவளை வரையாக சிறிலங்கா இராணுவம் அமைத்திருந்த மண்அணைகளை மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவான என். பி. ஏ. அணியினர் டோசர் மூலம் சீர்செய்து வருகின்றனர். இப்பகுதியில் வத்திராயன் கிராம மக்களுக்கான நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளதால் இதனைமேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் மருதங்கேணி ராஜீவ் வீதியிலிருந்து கண்ணிவெடிகள் அகற்றும் பணியினையும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். இப்பகுதி 2000 ஆம் ஆண்டில் இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தேநீர்ச்சாலைகள், உணவகங்களில் சுகாதார நிலை குறித்து பரிசீலிப்பு

(வடமராட்சி கிழக்கு)

பளைப்பகுதிக்குகடந்த வியாழன் நேரடியாக வருகை தந்த தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் பளையில் உள்ள அனைத்து உணவகங்கள், தேநீர்ச்சாலைகள், எல்லாவற்றையும் சென்று பார்வையிட்டதுடன் ஒவ் வொரு கடையினுள்ளும் உள்ள சுகா தாரக் கேடான இடங்களைப் படம் எடுத்ததுடன் இவ்விடயங்களில் கூடிய கவனம் எடுத்து சுகாதார குறைபாடனவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யும்படியும் கடை உரிமையாளர்களுக்கு பணித்துள்ளார். இவருடன் கிளி மாவட்ட தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் காந்தா, பளை வடமராட்சி கிழக்கு இணைப்பாளர், பச்சிலைப்பள்ளி பொதுச்சுகாதார பரிசோதகர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச்செயலாளர் ஆகியோர் சென்றிருந்தனர். (11)

## உபகரணங்கள் வழங்கல்

(வட்டக்கச்சி)

கிளி/ கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. வட்டக்கச்சி பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்கள் ஐந்துபேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு கிளி/கிழக்கு பணியாளர்களால் கொப்பி, பேனை,பென்சில், புத்தகம் போன்ற பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. ஏனைய வறிய மாணவர்களை இனம்கண்டு பாடசாலைப் பொருட்கள் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (12)

## முல்லை. அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர்களுக்கான கலந்துரையாடல்

முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் செயற்பட்டு வரும் முல்லைமாவட்டத்திற்குட்பட்ட அரச சார்பற்ற நிறுவன இணைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று கடந்த வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைமாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் எம்.ஆர். மூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட நிறுவன இணைப்பாளர்கள் நிறுவனம் ஊடாக செய்யப்பட்டவேலைகள், செய்யப்பட போகும் வேலைகள் தொடர்பாக செயற்பாட்டறிக்கை வழங்கினர்.

இதில் கலந்து கொண்ட நிறுவனங்கள், கிராமங்கள், நகரங்கள் தோறும் மக்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டி சமூக மேம்பாட்டிற்கும் மக்களின் வாழ்வாதாரங்களுக்கும் வழிகாட்டிகளாக செயற்படவேண்டும் என முல்லைமாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் எம்.ஆர். மூர்த்தி கேட்டுக்கொண்டார் முல்லைமாவட்ட த.பு.கழக ஆலோசகர் பாலசுப்பிரமணியம் கருத்துரை வழங்கினார்.

## முல்லை மீனவர் நலன் கருதி தற்காலிக வெளிச்சவீடு

முல்லைத்தீவு மீனவர்களின் நன்மை கருதி முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் கரையில் தற்காலிகமாக வெளிச்சம் அமைப்பதற்கான நடவடிக்கை நடைபெற்று வருகின்றது என முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தால் வெளிச்சவீடு அழிக்கப்பட்டு மீனவர்கள் கரை தெரியாது எத்தனையோ தடவை வழிமாறிய சம்பவங்கள் உள்ளன. இந்நிலையில் சுனாமியின் தாக்கத்தினால் இன்னமும் கரை தெரியாது மீனவர்கள் தடுமாறி பாதைமாறிச் செல்வதால் பெரும் சிக்கலை எதிர்கொள்வதாகவும் இதனால் தற்காலிக ஏற்பாடாக இந்த சிறிய வெளிச்சம் வழங்குவதற்கு தாம் நடவடிக்கை எடுத்திருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். (20)



நெதர்லாந்து வாழ் தமிழ் மக்களும் நெதர்லாந்து மக்களுமாக இணைந்து ரூபா 18 இலட்சம் பெறுமதியான கரவலைஉபகரணத் தொகுதியினை வழங்கியுள்ளனர். நெதர்லாந்து பிரதிநிதி டியொாங் சமாசத் தலைவரிடம் அண்மையில் இவற்றை வழங்க சமாசத்தலைவர் அ.மரியராசா சுனாமியினால் கரவலைத்தொழிலினை முற்று முழுதாக இழந்த முல் லைத்தீவு [illegible]ப் பாட்டைச்சேர்ந்த நாகராசா என்பவரிற்கு வலைகள் படகுகள் [illegible]ங்கள் வழங்குவதைப்படத்தில் காணலாம். (படம் - சகிலா)

## போர், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு "உணவும் போசாக்கும்" பயிற்சிப்பட்டறை

முல்லைத்தீவில் சுனாமியினால், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் போசாக்கு நிலையினை மேம்படுத்தும் நோக்குடன் "உணவும் போசாக்கும்" என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறையொன்று நடைபெற்றுள்ளது. ஐரோப்பிய ஆணைக்குழு ஐ. நா. உணவு விவசாய நிறுவனத்தின் ஊடாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் இப்பயிற்சிப்பட்டறை சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடத்தப்பட்டது.

உலக உணவு விவசாய சங்க முல்லை மாவட்ட இணைப்பாளர் மோசஸ் தலைமையில் ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை உலக உணவு ஸ்தாபனத்தின் பணிப்பாளர் சேத்கிசோட், உலக உணவு ஸ்தாபன சத்துணவுத்திட்ட இணைப்பாளர் லலிதா ஆகியோர் ஏற்றினார்கள்.

தமிழீழ தேசியக் கொடியினை உலக உணவு ஸ்தாபனத்தின் முல்லை மாவட்ட திட்ட இணைப்பாளர் து.நாதன் ஏற்றினார்.

கருத்துரைகளை உலக உணவு ஸ்தாபன இணைப்பாளர் சேத்கிசோட், உலக உணவு ஸ்தாபன போசணை ஆலோசகர் திருமதி லலிதா - வட்டாச்சாரியார் விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர் விஜயகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பயிற்சிகளை லலிதா, ரஞ்சினி ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வில் பெருமளவான பெண்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# வயல்நிலங்களை மக்களிடம் கையளிக்குக; தென்மராட்சி விவசாய சம்மேளனம் வலியுறுத்தல்

(தென்மராட்சி)

இந்த வருடம் காலபோக நெற்செய்கைகளை மேற்கொள்ள படையினர் வயல் நிலங்களை மக்களிடம் கையளிக்க வேண்டும் என்று தென்மராட்சி விவசாய சம்மேளனம் வலியுறுத்தியுள்ளது.

காலபோக நெற்செய்கைகளை மேற்கொள்ள வசதியாக படையினரால் உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பெருமளவு ஏக்கர் வயல் நிலங்களைப் படையினர் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

தொடர்ந்து சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் இந்த நிலங்களை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும். வயல்நிலங்கள் தற்பொழுது புதர்கள், பற்றைகள், மண்டிக் காணப்படுவதுடன் மிதிவெடிகளும் புதைக்கப்பட்டிருப்பதாவும், இவற்றை அகற்றி மக்களிடம் ஒப்படைக்க படைத்தரப்பு முன்வர வேண்டும் என்றும் தென்மராட்சி விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது. (28)

# மறுவன்புலவு வடக்கில் பயிர்ச்செய்கைக்கு அனுமதி

(தென்மராட்சி)

யாழ். தென்மராட்சி தெற்கு மறுவன்புலவு வடக்கில் படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மறுவன்புலவு வடக்கில் உள்ள சில பிரதேசங்களில் இருக்கும் விளை நிலங்கள் சிலவற்றை ஏற்கனவே விடுவித்திருந்த படையினர் அங்கு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான அனுமதிகள் எதனையும் வழங்கவில்லை.

இதனால் தாம் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டி விவசாயிகள் விடுத்துவந்த கோரிக்கைகளைத் தொடர்ந்து இவ்வாரம் தொடக்கம் இப்பகுதியில் பருவகால நெற்செய்கைகளுக்கான நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பிக்கலாம் என இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். (33)

# கழிவகற்றல் பாவனைக்கு நான்கு மூடிய உழவு இயந்திரங்கள்

(வலி.மேற்கு)

யாழ். மாநகரசபையின் கழிவகற்றல் பாவனைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்திமையம் நான்கு மூடிய உழவு இயந்திரங்களை வழங்க முன்வந்திருப்பதாக மாநகரசபை ஆணையாளர் தெரிவிக்கின்றார்.

யாழ். மாநகரசபைப் பகுதிக்குள் நாளொன்றுக்கு சுமார் 60 மெற்றிக் தொன் கழிவுகள் சேருகின்றன. இவற்றில் நாளொன்றுக்கு 35 - 40 மெற்றிக் தொன் கழிவுகளே மாநகர சபை ஊழியர்களால் அகற்றப்பட்டு வருகின்றன.

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமாக ஏழு உழவு இயந்திரங்களும் 21 பெட்டிகளும் மட்டுமே இருக்கின்றன. இவற்றைவைத்துக் கொண்டு திருப்திகரமான சேவையை வழங்க முடியாது இருக்கின்றது.

இதையடுத்து, சபை யு. என். டி. பி. நிறுவனத்துக்கு வாகனங்கள் தந்து தவுமாறு கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தது. இந்நிலையிலேயே யு. என். டி. பி. நிறுவனம் இவற்றை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றது என்றும் கலாநிதி க. குணராஜா தெரிவித்தார்.

# இந்தியாவில் இருந்து திரும்பியோருக்கு காசநோயின் தாக்கம் அதிகம் எனக் கண்டுபிடிப்பு

## -காசநோய் வைத்திய நிபுணர் சி.ஜமுனானந்தன்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் வாழ்ந்துவிட்டு மீளக்குடியமரத் திரும்பியுள்ள யாழ்.குடாநாட்டவர்கள் மத்தியில் காசநோயின் தாக்கம் அதிகம் காணப்படுவதாக யாழ்.மாவட்ட காசநோய் வைத்தியநிபுணர் வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தன் கூறியுள்ளார்.

இவர்களின் மூலம் மேலும் பலருக்கு காசநோய்த் தொற்று ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்தகாலங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த பரிசோதனை நடவடிக்கைகளின்போது இந்தியாவில் வாழ்ந்து விட்டு மீளக்குடியேறத் திரும்பியோரில் அதிகமானோர் காசநோய் தொற்றுக்கு இலக்காகியுள்ளமையும், இவர்கள் இந்தியாவில் வாழ்ந்த காலத்திலேயே இந்நோய்த் தொற்று ஏற்பட்டிருக்கின்றமையும் கண்டறியப்பட்டது.

அத்துடன் இவர்கள் யாழ். குடாநாட்டில் உள்ள தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த பின்னர் இவர்கள் குடியமர்ந்த பிரதேசத்தில் வாழ்வோரிடையேயும், இவர்களது நண்பர்கள், உறவினர்களிடையேயும் இக்காசநோய்த் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் இது குறித்து விழிப்புடன் இருப்பதுடன் தமது உடலில் காசநோய்க்கான அறிகுறிகள் ஒன்றோ பலவோ காணப்படின் உடனடியாக வைத்திய பரிசோதனைகளை மேற்கொண்டு உறுதி செய்துகொள்ளுமாறும் காசநோய் வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி சி.ஜமுனானந்தன் மேலும் எச்சரித்துள்ளார். (33)

# நிலத்தடி நீரை ஆய்வு செய்ய ஏழு பேர் கொண்ட குழு நியமனம்

(வலி-மேற்கு)

யாழ்.மாவட்டத்தில் நிலத்தடி நீரை ஆய்வு செய்வதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின்-தரைக்கீழ் நீர் பாதுகாப்புத்திட்டம் என்ற அமைப்பு முன் வந்திருக்கின்றதென யாழ்.மாநகர ஆணையாளர் க.குணராஜா தெரிவிக்கின்றார்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் தரைக்கீழ் நீர் பாதுகாப்புத்திட்டத்தின் பணிப்பாளர், யாழ். மாவட்ட அரச அதிபரிடம் தொடர்பு கொண்டு தரைக்கீழ் நீரை ஆய்வு செய்வதற்கு ஒரு குழுவை நியமித்து வழங்குவதோடு அது தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டிருக்கின்றது.

இது தொடர்பாக சமீபத்தில் யாழ். செயலகத்தில் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் தரைக்கீழ் நீரை ஆய்வு செய்வதற்கென்று ஏழு பேர் கொண்டகுழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்குழு விரைவில் இது தொடர்பான அறிக்கை ஒன்றைத் தயாரிக்க விருப்பதாகவும் கலாநிதி க.குணராஜா தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின்போது தரைக்கீழ் நீர்வளம், கழிவகற்றல், குடிநீர் விநியோகம் ஆகிய விடயங்கள் குறித்துவிரிவாக ஆராயப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (37)

# மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்க வேண்டுமென வைத்தியசாலை வட்டாரத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவி வருவதால் மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதில் பாரிய சிக்கலை எதிர்நோக்கி இருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரசவ வைத்திய நிபுணர் இம் மருத்துவமனையில் பணியாற்றியும், மயக்க மருந்து ஏற்றும் நிபுணர் தற்பொழுது இல்லாமையால் பிரசவத்திற்கு வரும் தாய்மார்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கே அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

மேலும் சத்திர சிகிச்சை வைத்தியர் பற்றாக்குறை நிலவி வருவதாகவும், பதினைந்து மருத்துவர்கள் பணியாற்றிய இடத்தில் தற்பொழுது ஐந்து மருத்துவர்களே பணியாற்றி வருவதாகவும் இதனால் இப்பிரதேச மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்வதில் பின்னடைவு ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# புதிய மரவேலைப்பயிற்சிநெறி இருநிலையங்களில் இன்று ஆரம்பம்

(வலி - மேற்கு)

சுண்டுக்குளி, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் அமைந்திருக்கும் அரச மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளில் புதிய மரவேலைப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தொழில்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் பி. ராகவ[illegible] தெரிவிக்கின்றார்.

இப்பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வுகள் இன்று காலை பத்து மணிக்கு தொழிற்றுறைத் திணைக்களத்தின் மாவட்ட அ[illegible]வலர் பி. ராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நிகாப் நிறுவனத்தின் உதவித்திட்டப் பணிப்பாளர் வி. சாம்பசிவம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயிற்சி நெறிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சுண்டுக்குளி, சுன்னாகம் ஆகிய இருபாடசாலைகளிலும் தலா 25 என்ற வீதத்தில் மொத்தம் 50 பிள்ளை[illegible]ளுக்குப் பயிற்சி வழங்கப்படவி[illegible]கின்றதெனவும் பயிற்சிக் காலத்தில் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படவுள்ளது என்றும் தொழிற்றுறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் பி. ராகவன் தெரிவிக்கின்றார். (37)

# யாழ்.மின்சாரநிலைய வீதி காவலரணை பின் நகர்த்த பொதுஅமைப்புக்கள் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய பேருந்து நிலையப் பகுதியில் இருந்து மின்சார நிலைய வீதியிலுள்ள இராணுவக் காவலரண்களை நூறு மீற்றர் பின் நகர்த்துமாறு பொது அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

கடந்த மாதம் பொலிசாருடன் நடைபெற்ற கலந்துரையாடலின போது மின்சார நிலைய வீதியில் உள்ள இராணுவத்தினரை அகற்றி மின்சார நிலைய வீதியினைத்திறந்து மக்கள் பாவனைக்கு விடுமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்திருந்தன. இதற்கு இராணுவ உயர் அதிகாரிகள் மறுப்புத் தெரிவித்திருப்பதாக யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் விஜெயவர்த்தன தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பொலிசாருடன், பொது அமைப்புக்கள் நடத்திய கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதனையடுத்து மின்சார நிலைய வீதியின் பேருந்து நிலைய பகுதியில் நூறு மீற்றர் தூரத்திற்கு இராணுவக் காவலரண்களை அகற்றித் தருமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி நூறு மீற்றர் தூரத்திற்கப்பால் இராணுவ காவலரண்கள் அகற்றப்படும்போது யாழ்.மாநகரசபையின் பொது மலசல கூடம் பொது குளியல் அறை மற்றும் யாழ்.நகர்ப்புற உபதபாலகக் கட்டடம் பௌர்ணமி நாள் பொது அங்காடி என்பன மக்கள் பயன்படுத்தக் கூடியதா இருக்கும் எனவும் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

# இருபாலை-மடத்தடி கிராமத்திற்கு அடிப்படை வசதி செய்துதரக் கோரிக்கை

(இருபாலை)

இருபாலை கிழக்கு மடத்தடிக் கிராமத்திற்கு அடிப்படை வசதிகளைச் செய்துதருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்துதர வேண்டும் என இப்பகுதி மக்கள் பல்வேறு தரப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். பல வருடங்களாக பின்தங்கியுள்ள இக்கிராமத்தில் அடிப்படை வசதிகள் முன்னெடுக்கப்படாமையால் மக்கள் பின்தங்கிய சூழலிலேயே வாழ்ந்து வருகின்றனர். கல்வி வளர்ச்சி பின்தங்கி உள்ளதுடன் வாழ்க்கை நிலையும் இக்கிராமத்தில் பின்தங்கியே காணப்படுகின்றது. இது குறித்து அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்தும் படியும் இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

# புத்தூர் வடக்கு வேம்பாப்புலவு கிராமம் மின்சார வசதி இன்றி அவதி

(அச்சுவேலி)

புத்தூர் வடக்கு வேம்பாப்புலவு கிராமத்தில் வாழ்கின்ற மக்கள் மின்சாரம் இன்றி நீண்டகாலமாக பெரும் சிக்கல்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் பல்வேறு பக்கங்களிலும் உள்ள கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கிராமத்தில் மின்சார வசதி இல்லாமையால் கல்விகற்கின்ற மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதாக பெற்றோர் கவலை அடைகின்றனர்.

இந்தக்கிராமத்தின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான முன்மொழிவுத்திட்டங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள அரச,அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்ட போதிலும் இதுவரையும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருவது பெரும் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (கீ)

# கற்கோவளம் பகுதியில் முதற்கட்டமாக 50 வீடுகள்

(பருத்தித்துறை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் பகுதியில் போர்ட்றோட்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் ஏழுஇலட்சம் ரூபா செலவில் முதல் கட்டமாக ஐம்பது வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட இருப்பதாக இந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. கற்கோவளம் புனித நகர் பகுதியில் யாழ்.அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அரச காணியிலேயே இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதாகவும், மின்சாரம், சாலைவசதி, மலசலகூடம், கிணறு என அடிப்படை வசதிகளுடன் இவ்வீடுகள் அமைக்கப்படவுள்ளதாகவும் வரும் ஆறாம் திகதி யாழ். அரசாங்க அதிபரினால் இவ் வீடுகளைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# சனாதிபதியாக வருபவர் பொறுப்பேற்க வேண்டிய பிரச்சினைகள் ஏராளம்

சனாதிபதி வேட்பாளர் என்ற பூனை திடீரென பையிலிருந்து வெளியே பாய்ந்துள்ளது. அதாவது பொதுசன ஐக்கிய முன்னணியின் அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியினது வேட்பாளர் கடந்த 28 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளார்

நாட்டின்ஆளும்கட்சி நேரத்துடனேயே தனது வேட்பாளரை அறிவித்திருப்பதானது இந்த வருட நடுப்பகுதியளவில் சனாதிபதித் தேர்தல் நடத்துவதற்கு என சிலர் நம்புகின்றனர் . சில வேளை அது வரும் டிசம்பர் மாதமே நடைபெறும் என்றும் கருதப்படுகின்றது. சனாதிபதித் தேர்தலுக்காக தபால் மூல வாக்களிப்புக்கான அட்டைகள்



அச்சிடப்பட்டிருப்பதாக பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. எனினும் முடிவு தேர்தல் ஆணையாளரிடமே உள்ளது. அவர் இந்த மாதம் முதல் வாரங்களில் தனது முடிவை அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் தொடர்பில் ஒரு வருடமாக விவாதங்கள் நடைபெற்று வந்தன. இந்த விவாதம் அநுராவையும் மகிந்தவையும் மையமாக வைத்து நடைபெற்று வந்தது. இது தொடர்பாக அநுரா முன்பு தெரிவிக்கும்போது பூக்கூடைகளை கொண்டு கோயில் கோயிலாக அலைந்தாலும் சனாதிபதிப் பதவி கிடைக்காது என குறிப்பிட்டார். மகிந்தவும் அவ்வப்போது அநுரா மீது சொல்லம்புகளை ஏவினார், எனினும் இன்று இருவரும் ஒன்றாக கைகோர்த்து போட்டிக்குத் தயாராகிவிட்டனர்.

மகிந்தவைப் பொறுத்தளவில் அவர் இன்னும் ஒரு ஹெக்டர் கொப்பேகடுவவாகிவிடுவாரோ என சிலர் கருதுகின்றனர். ஹெக்டர் கொப்பேகடுவ 1982 ஆம் ஆண்டு கட்சித்தலைவி உட்பட்ட அநேகமானோரின் ஆதரவு இல்லாமலேயே போட்டியிட முயன்றார். மகிந்தவின் நிலையும் அது போன்றாகிவிடுமோ என சிலர் கருதலாம். நன்மை என எண்ணிப் பார்க்குமிடத்து அநுரா- மகிந்தவின் கூட்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு பெரும்பலமே. மகிந்த என்பவர் பிரபலமிக்க ஒருவராவார். அவர் தனது அரசியல் சுயரூபத்தை குறுகிய காலத்தில் வெளிக்கொணர்ந்தவராவார். அதன்போது அவர் பிரேமதாசாவின் கொள்கைகளைக் கையாண்டார். அதனையே அநுரா பூக்கூடை அரசியல் என்று கூறினார். மகிந்த மேலும் நல்லதொரு தேசிய அரசியல் வாதியாக மிளிர வேண்டுமாயின் அவர் இன்னும் முன்னேற வேண்டும். சர்வதேச அரசியலில் அவர் நிறைய அனுபவம்பெற வேண்டும். அரசியல், மொழி, சிந்தனை என்பவற்றில் அவர் ஆழமான அறிவைப் பெற வேண்டும். புகழைத்தரும் அரசியலில் இருந்து அவர் சற்று விலகி கொள்கைமிக்க அரசியலுக்கு வரவேண்டும்.

மகிந்தவின் புகழுக்கு பஞ்சமிருக்காது எனினும் சனாதிபதி ஒருவருக்கு தேவையானது வெறும் புகழ் மட்டும் அல்ல. அன்று மகிந்தவை சாடியவர்கள் இன்று பின்னால் இழுபடுகின்றனர் எனினும் அடுத்த சனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவாக இருப்பது அன்று அவருடன் முரண்பாடு கொண்டிருந்த மங்கள சமரவீரவாவார். மகிந்த பிரதமராக வருவதை அன்று சகிக்காதவரே இந்த சமரவீர. இந்த விடயத்தில் இன்னுமொரு விசேடம் அன்று மகிந்தவை ஆதரித்தோர் இன்று அவரை எதிரியாக கருதுவதாகும். மகிந்தவுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி சில இடையூறுகளை செய்தபோது அதை அவதானித்த ஐ.தே கட்சியும் அதன் ஊடகங்களும அவர் சார்பில் வாதாடின.சில சமயங்களில் சனாதிபதி சந்திரிகாவும், மகிந்தவும் கருத்து மோதலைக் கொண்ட சம்பவங்களும் காணப்பட்டன.

தற்போது சில அரசியல் விமர்சகர்கள் அநுராவும் மகிந்தவும், இணைந்திருப்பது ஐ.தே. கட்சிக்கு பாரிய அச்சுறுத் தலாக இருக்கும் என தெரிவித்துள்ளனர். மகிந்தவின் செல்வாக்கும், அநுராவின் வெளிநாட்டு அனுபவமும் இணைந்து பலம்மிக்க தலைமைத்துவத்தை உருவாக்கும் எனக் கருதுகின்றனர். யார் எவ்வாறு கருதினாலும் அநுரா நாட்டின் சிறந்த அரசியல்வாதியாவார். எனினும் ஹொர கொல்ல அரசியல் வம்சத்தில் அவர் (மகுடம் சூட முடியாத) தம்பியாகிவிட்டார். அவர் தம்பியாகாமல் பண்டாரநாயக்க குடும்பத்தில் மூத்த சகோதரராக இருந்திருப்பின் 20 வருடங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அவர் மகிந்தவுக்கு அடுத்தவராகக் கருதப்பட்டிருக்க மாட்டார்.

முன்னர் குறிப்பிட்டது போன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அனைத்தும் சுப கருமங்களே எனின் அநுரா-மகிந்த கூட்டும் நல்ல சகுனமே, எனினும் இது எவ்வளவு நாளைக்கு நீடிக்கும் என்பது பற்றிக் கூறமுடியாது. பழைய சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அநுரா அணியில்இருந்த மகிந்த பின்னர் அனுராவுக்கே எதிரியானது ஒரு தலைவிதியாகும்.

ஆயினும் இன்று இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டுவிட்டனர். அநுரா பிரதமராக வேண்டுமாயின் மகிந்தவை சனாதபதியாக்க வேண்டியது அநுராவின் தேவையாகும். பொதுசன ஐக்கிய முன்னணியினதும் ஜே.வி.பியினதும் பிரதான குறிக்கோள். இத்தேர்தலில் ஐ.தே கட்சியை தோல்வியுறச் செய்வதாகும். அவ்வாறாயின் இவர்களது பொது எதிரி ஐ.தே கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவுமே . அதனால் இவர்கள் மீண்டும் கூட்டுச் சேருவதற்கு நோக்கமும் இல்லாமலில்லை. ஒருசமயம் ஜே.வி.பி யின் எதிரியாக இருந்த மகிந்தவுடன் தற்போது ஜே.வி.பி இணையும் என்ற கருத்தும் சிலரிடம் நிலவுகின்றது.

இவ்வாறான நிலைமைகளினால் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு கடும் போட்டி ஏற்படும் என்பது புலனாகிறது. மகிந்த ராஜபக்ஷவை வேறொரு கொப்பேகடுவ என ஐ.தே. கட்சி கருதினால் அது பெரும் தவறாகும். ஐ.தே. கட்சி தற்போது அரசாங்கம் தமது கைகளுக்கு வந்து விட்டதாகவே கருதுகின்றது. இது தற்காலிகமானதாகும், அத்துடன் பலரின் எதிர்பார்ப்பு முதலில் நடப்பது பாராளுமன்ற தேர்தல் அல்ல சனாதிபதித்தேர்தல் என்றே. மக்கள் சக்தி என்ற பேரணி மூலம் ரணில் பெரும் அத்திவாரத்தையிட்டுள்ளார். தனிப்பட்ட முறையில் நோக்கினால் ராஜபக்ஷவை விட ரணிலுக்கே அதிக அரசியல் செல்வாக்கும் அனுபவமும் காணப்படுகின்றது. மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்காததாலேயே ரணில் தேர்தல்களில் வெற்றிபெற முடியாதிருக்கலாம். ரணிலின் தீர்க்கதரிசனம் ஆழமானது. எனினும் அரசியல் வாதிகளுக்கு இருக்கவேண்டிய பொதுசனத் தொடர்பு ரணிலிடம் கிடையாது அவர் யாருடனும் கதைப்பதும் சிரிப்பதும் அவதானத்துடனேயே. எம்.பி க்களுடனும் அவர் பழகுவது தலைவர் என்ற முறையில் அன்றி ஒரு பிரபல பாத்திரமாகப் பழகுவது கிடையாது. எனினும் மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சி எம். பிக்களிடம் கூட அன்னியோன்னியமாகப் பழகுவார்.

எனவே இந்தக் குறைநிறைகளை இனம்கண்டு சரிபிழைகளை திருத்தி இப்போதிருந்தே மகிந்த ராஜபக்ஷவுடன் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

இதன்போது இனம் காண வேண்டிய இன்னும் ஒரு விடயத்தைப்புரிந்துகொள்ள வேண்டும். அது சிறுபான்மைக்கட்சியின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதாகும். மகிந்தவைப் பொறுத்தவரை அவர் அந்த விடயத்தில் சற்று பின்தங்கியவராகக் காணப்படுகிறார்-தெற்கில் ருகுணு புத்திரன் என வர்ணிக்கப்படும் இவர் சிங்கள பௌத்தர்களின் வாக்குகளைப் பெற உரியவர் என்றபோதும் சிறுபான்மையினங்களின் வாக்குகள் இன்றி இவர் சனாதபதியாக முடியாது இருக்கும்

இவர் பிரதமராகப் பதவியேற்று ஒருவருடத்துக்கு மேலாகிவிட்டாலும் சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள அவர் எடுத்த முயற்சி குறைவே. சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள நிறைய வழிவகையிருந்தபோதும் மகிந்த அதனை பெரிதுபடுத்தாது சிங்களவர்களிடமே சென்றார். எனினும் முஸ்லிம்களிடையே அவருக்கு இருக்கும் செல்வாக்கு அவ்வளவு பிரச்சினைக்குரியதல்ல. அண்மையில் முஸ்லிம் சபையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் மகிந்த ஆற்றிய உரை முஸ்லிம்களின் மதிப்பை பெற்றது. தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள பிரிந்திருக்கும் முஸ்லிம்கள் ஒன்றுபடவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அதற்காக அவருக்கு நல்லபயன் கிடைத்தது. எனினும் இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க சற்று வித்தியாசமாகக் காணப்படுகிறார். சிற்சில பிரச்சினைகள் இருப்பினும் தமிழர் பிரதிநிதிகளிடம் ரணிலுக்கு நல்ல மதிப்புள்ளது. எனினும் வடக்கு கிழக்குப் பகுதி வாழ் தமிழர் வாக்குகளை தீர்மானிப்பது அப்பகுதி பிரதிநிதிகளே. எனவே அப்பகுதி வாக்குகளைப் பெறுதல் ரணிலுக்கு முடியாத காரியமாகும்.

எவ்வாறேனும் நாட்டின் தேசியவாதிகளின் வாக்கு அதாவது சிங்களவர்களின் வாக்கைப் பெறுவது மகிந்தவுக்கு கடினமல்ல. எனினும் அதுமட்டும் அவர் சனாதிபதியாவதற்குப் போதுமானதாக இருக்காது. கடுமையான போட்டிகளின் போது தலைவர்களை நிர்ணயிப்பது தமிழர்களின் வாக்குகளே. இதன்போது சந்திரிகாவின் பொறுப்பு என்ன மாதிரியானதாக இருக்கும் என்பதையும் ஆராய்வது நன்று. இவ்வருடமோ, அடுத்த வருடமோ சனாதிபதித் தேர்தல் நடைபெற்ற பின் அவர் தனது அரசியல் எதிர்காலம் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பார்? என்பது தெரியவில்லை சிலர் அவர் மண்டேலாவைப் போன்றோ, லிகுவான்யூ போன்றோ செயற்படுவார் என நினைக்கலாம். மண்டேலாவும், லிகுவான்யூவும் அரசியலிலிருந்து ஓய்வு பெற்றாலும் தமது கட்சிப் பணிகளில் ஈடுபட்டே வருகின்றனர். அவர்களே திரைமறைவிலிருந்து தனது கட்சிக்காரர்களை இயக்குகின்றனர். அதுபோல் சந்திரிகாவும் ஓய்வில் சென்றபின் கட்சிப் பணிகளில் ஈடுபடுவாரா? என்பது சந்தேகமே.


சுமார் 12 வருடமாக தனது பொறுப்பில் இருந்த அரசியலும் கூட்டமும் மகிந்தவின் கைகளில் செல்வதை பார்த்துக்கொண்டிருக்க வேண்டியநிலை சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது. மகிந்தவின் வெற்றியை உறுதி செய்ய தேர்தல் களத்தில் மேடைக்கு மேடை செல்ல சந்திரிகா தயாராக இருக்கிறாரா? என்றும் கூறமுடியாது.

முன்பு கூறியதுபோன்று ஜே.வி.பி யின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியாக தேசிய பிரச்சினை தொடர்பாகவும், பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பாகவும் அவர்களுடன் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியுள்ளது. ஆனால் இவ்விடயத்தில் மகிந்த ஜே.வி.பி யை சமாளிக்க முடியாது இருக்கலாம்.

இவ்விடயங்களில் சிறந்த இராஜதந்திரங்களை பிரயோகிக்க வேண்டியிருக்கலாம். மக்கள் முன் ஆதரவைப் பெற்றுக்கொள்ள நோர்வே அதிகாரிகளை தூசித்த மாதிரி நடந்துகொள்ளக்கூடாது.

தற்போது தேர்தல் சூடுபிடித்து வருகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி திடீரென வேட்பாளரை அறிவித்தவுடனேயே ஐ.தே.கட்சி தனது வாயை மூடிக்கொண்டது. எனினும் ஏனைய கட்சிகள் இன்னும் இதுபற்றி சிந்திக்காதுள்ளன. விசேடமாக ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகளின் முடிவு பிரதான கட்சியான ஐ.தே.கட்சியின் ரணிலை விட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகிந்தவையே அதிகம் பாதிக்கும். அது அவரின் போர்க்களம் சிங்கள பௌத்தர்கள் என்ற வகையிலாகும்.

எனினும் யார் சனாதிபதியானாலும் அவர் பொறுப்பேற்க வேண்டிய பிரச்சினைகள் அதிகமுள்ளன. இரண்டு வருடங்களாக தேங்கிக் கிடக்கும் சமாதான முன்னெடுப்புகள் அடியோடு மறைந்து போகாத வகையில் புத்துயிர் அளிக்க வேண்டியது புதிய சனாதிபதியின் பொறுப்பாகும். அத்துடன் வீழ்சி



யுற்றிருக்கும் பொருளா தாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியதுடன், சுனாமி பாதிப்புற்ற பகுதிகளின் புனரமைப்பை மேற்கொள்ள வேண்டும்.

இந்த சவாலில் வெற்றி பெறுவது சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதைவிட கடினமாகும் அதனால் வேட்பாளர்களிடம் நாடடின் எதிர்காலம்பற்றி தெளிவான பார்வையிருத்தல் அவசியம்.

சனாதிபதித்தேர்தலுக்காக மிகுந்த சிக்கலான தேர்தல் திட்டமிடலைச் செய்வது போன்று நாட்டைக் கட்டியெழுப்பவும் நீண்ட காலத்திட்டம் ஒன்று உருவாவதும் அதனை மக்கள் முன் விளக்குவதும் மிக அவசியமாகும்.

ரங்க கலன்சூரிய
(லங்காதீப)
தமிழில் வடிவேல்




**21.07.2005-**
**-27.07.2005**

## 21

☐இந்தோனேஷியாவின் சுமாத்ராதீவின் வடக்குப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.2 புள்ளியாகப் பதிவானது.

☐ அமெரிக்காவுக்கான சவுதியரேபிய தூதுவராக 22 ஆண்டுகள் பணிபுரிந்து வந்த இளவரசர் பந்தர் பின்சுல்தான் பதவியிலிருந்து இராஜினாமா.

☐ லண்டனில் நான்கு சிறிய குண்டுகள் இரட்டைத்தட்டுப் பேருந்திலும், மூன்று சுரங்க ரயிலும் வெடிப்பு. இதன் போது ஒருவர் காயமடைந்துள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக இருவர் பொலிசாரால் கைது.



பாதுகாப்புக் கடமையில் பொலிசார்

☐ ஈராக்கிற்கான அல்ஜீரிய இராஜதந்திரியும் அவரது உதவியாளரும் தலைநகர் பாக்தாத்தில் கடத்தப்பட்டனர்.


☐ சீனாவின் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.5 புள்ளியாகப் பதிவானது.

## 22

☐தற்கொலைக்குண்டுதாரி என்ற சந்தேகத்தில் பிரேசில் பிரஜையான ஜீன் சார்லஸ்டி மெனேஸெஸ் அந்நாட்டுப்பொலிசாரால் லண்டன் ஸ்டொக்வெல் ரயில்நிலையத்தில் சுட்டுக் கொலை.

## 23

☐எகிப்தின் செங்கடலை அண்மித்த பகுதி ஷாம்கல்ஷேற்கில் உள்ள சுற்றுலா விடுதியில் இடம்பெற்ற தொடர் குண்டுத்தாக்குதலில் 83 பேர் பலி, 200 பேர் காயம்.



☐ஜப்பானின் கிழக்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளியாகப் பதிவானது. இதன்போது 18 பேர் காயமடைந்தனர்.

☐லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 12 பேர் காயம்.

☐தலிபான் தீவிரவாதிகளினால் தென் ஆப்கானிஸ்தான் நீதவான் குயஷி நமதுல்லா சுட்டுக்கொலை.

☐தென் சீனாவில் பயணிகள் பேருந்து ஒன்று நதியொன்றுக்குள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் காணாமல் போயினர்.

## 24

☐நேபாளத்தில் டாவீக் மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஏழு இராணுவத்தினரும்,இரண்டு தீவிரவாதிகளும் பலி.

☐இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவுப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.3 புள்ளியாகப் பதிவானது.

☐ஈராக தலைநகர் பாக்தாத்தின் தென்கிழக்குப் பகுதியில் அல்மஸ்தல் பகுதியில் வெடிமருந்து நிரப்பிய பாரவூர்தி மூலம் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 42 பேர் பலி, 25 பேர் படுகாயம்.




☐ ஆந்திரமாநிலத்தில் பெய்துவரும் பலத்த மழைகாரணமாக பத்துப்பேர் பலி.

## 25

☐ ஆப்கானிஸ்தானில் வருஸ்கான் மாகாணத்தில் அமெரிக்க மற்றும் உள்ளூர் படையினர் இணைந்து தீவிரவாதிகள் முகாமொன்றின் மீது நடத்திய திடீர்த் தாக்குதலின் போது 40 தலிபான் தீவிரவாதிகள் பலி.

## 26

☐ அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சிநிலையம் "டிஸ்கவரி" விண்கலத்தை விண்ணில் செலுத்தியது.




☐ வடகொரியா அணுவாயுதத்திட்டங்கள் பற்றிய ஆறுதரப்பு பேச்சுவார்த்தைகள் பீஜிங்கில் ஆரம்பம்.

## 27

☐ நீண்ட நாட்களாக முறுகல் போக்குடன் இருந்த இஸ்ரேல் பிரான்ஸ் உறவைப் புதுப்பிக்கும் வகையில் இருநாட்டுத் தலைவர்களும் சந்தித்துப் பேசினர்.

☐ இந்தியாவின் வர்த்தக நகரான மும்பையில் கடும் மழைகாரணமாக 500இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.



# சுவிஸ் த.பு.கழகத்தின் நிதியுதவியுடன் மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு தற்காலிக வீடுகள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப்பங்களிப்புடன் சுனாமிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு நாவலடி, திருச்செந்தூர் கிராம மக்களுக்கு தற்காலிக வீடுகள் கையளிக்கும் வைபவம் கடந்த வியாழன் பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.



சுவிஸ் தமிழர்புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஆதிரியான் அவர்கள் தலைமையில் மங்கல இசை வாத்தியத்துடன் இந்நிகழ்வு ஆரம்பிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள். த.கனகசபை, செல்வி.தங்கேஸ்வரி, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பா.அரியநேத்திரன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். மற்றும் மண்முனை வடக்கு பிரதேசச் செயலாளர் சிறிசங்கர், சுவாமிஜி ஆத்மானந்தஜீ, மாவட்ட மின்சார பொறியியலாளர் பரஞ்சோதி, பிரிகேடியர் பேட்டி பெரேரா, மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் தேவராஜன், சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் துரை.பாலச்சந்திரன், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பணியாளர்கள், பொதுமக்களெனப் பலர் கலந்துகொண்டனர். வீடு கையளிப்பு நிகழ்வின் முதல் நிகழ்வாக வைபவ ரீதியாக சுவிஸ் கிராமத்துக்கான உள்வீடு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சண்முகம் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து வீடு கையளிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

அதில் முதல் வீதியினை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கனகசபையால் கையளிக்கப்பட்டது. இரண்டாவது வீட்டினை மண்முனை வடக்கு பிரதேசச்செயலாளர் சிறிசங்கரும், மூன்றாவது வீட்டினை சுவாமி ஜி ஆத்மானந்தஜீயும், நான்காவது வீட்டினை சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் ஆதிரியான் அவர்களும், ஐந்தாவது வீட்டினை யு.என்.டி.பி நிறுவனப் பிரதிநிதியும், திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து சுவிஸ் கிராமத்துக்கான மின்சார இணைப்பை மட்டக்களப்பு மாவட்ட மின்சாரப் பொறியியலாளர் பரஞ்சோதியும், முன்பள்ளியினை ஜி.ரி.இசற். நிறுவனத் ஸ்தாபனத் தலைவர் **Dr.Dietrich**, யும், நலன்புரி நிலையத்தினை மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறியியலாளர் சுரோஸ்குமார் ஆகியோர் திறந்து வைத்தனர்.

# அரசானது சிங்களப்பகுதியை வளர்க்கவும் தமிழர் பகுதியை சிதைக்கவும் உழைக்கின்றது

## -தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன்

தென்னிலங்கை அரசானது சிங்களப்பகுதிகளை வளர்க்கவும், தமிழர் பகுதிகளைச் சிதைக்கவும் இன்று வரை அயராது உழைத்து வருகிறது என சுதேசமருத்துவர்களுக்கான கலந்துரையாடலில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்கிரமன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண சித்தமருத்துவ கல்லூரியில் கடந்த 17 ஆம் திகதி சுதேச மருத்துவர்களுக்கான கலந்துரையாடல் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் இடம் பெற்றது. இதில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்; தென்னிலங்கை அரசானது சிங்களப்பகுதிகளை வளர்க்கவும், தமிழர் பகுதிகளைச் சிதைக்கவும் இன்றுவரை அயராது உழைத்து வருகிறது. இதனால் எமது மருத்துவத்தை வளர்ப்பதில் பெரும் பின்னடைவை நோக்கி வருகிறோம். இனிவரும் காலங்களில் இக்குறைபாட்டை சரியாக இனங்கண்டு நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார். அத்துடன் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயத்தினையும் வலியுறுத்தினார். இதில் சுதேச மருத்துவசேவைக் குறைபாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன் போது சுதேசமருத்துவத்தை வளர்க்க அப்பகுதி சபைகள் ஆர்வம் காட்டாமை, சுதேச மருத்துவர்களுக்கான கட்டட வசதி செய்யப்படாமை, சுதேச மருந்துகள் தேவையானதும் சரியானதுமான அளவுகளில் வழங்கப்படாமை, சுதேச மருத்துவச் செயற்பாடுகளை வளர்க்க அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்த சபை தொடர்ந்து முயற்சிக்காமை, சுதேசமருத்துவ சேவைகள் தரத்தை உயர்த்தாமை, சுதேச சுகாதார வைத்திய அதிகாரி ஒருவர் இல்லாமை, சுதேச மருத்துவம் சாராதோர் அதன் கீழ் சுதேசமருத்துவ சேவையைக் கண்காணித்து வருகின்றமை, அரச செயலக ஒன்றுகூடலில் சுதேச மருத்துவ சேவை செய்வோர் அழைக்கப்படாமை, நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வசதிகள் மேற்கொள்ளாமை போன்ற குறைபாடுகள் சபையில் சுட்டிக்காட்டப்பட்டன.

# நிர்வாகசேவை அலுவலகத் தாக்குதல்; பொது அமைப்புக்கள் கண்டனம்

(வவுனியா)

வவுனியா திருநாவற்குளத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாக சேவை அலுவலகம் மீது நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்திற்கு கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்,வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உள்ளிட்ட அமைப்புக்கள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான மனுக்களைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு சர்வதேச அமைப்புக்கள், சிறிலங்கா சனாதிபதி ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளன.

# பதவி உயர்வில் பாரபட்சம்; பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மனுத்தாக்கல்

(கொழும்பு)

பதினைந்து வருட காலத்திற்கு மேலாக பொலிஸ் கான்ஸ்டபிள்களாகப் பணியாற்றிய தமக்கு சாஜன்ட்டாக பதவி உயர்த்தப்படுவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக 14 பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இதனையடுத்து தேசிய பொலிஸ் ஆணைக்குழு இவர்களது முறைப்பாடு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன் இந்த முறைப்பாடு தொடர்பான அறிக்கை ஒன்றையும் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் படியும் உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, கான்ஸ்டபிள்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் தமது அடிப்படை உரிமைகள் பாரிய அளவில் மீறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சனாதிபதித்தேர்தலுக்கான பிரச்சாரம் சந்திரிகா தலைமையிலேயே முன்னெடுப்பு

## -சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்மானம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளராக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் சனாதிபதித்தேர்தலுக்கான நடவடிக்கைகளை தற்போதைய சனாதிபதி சந்திரிகா தலைமையிலான குழுவே முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென கட்சி தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதிசெய்வதன் நோக்கில் தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளினதும் ஆதரவைப்பெற்றுக்கொள்ள அவர்களுடன் பேச்சு நடத்தும் பொறுப்பு சனாதிபதியிடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அதனை அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இந்தப்பொறுப்பை அண்மையில் நடைபெற்ற கட்சியின் செயற்குழு சந்திப்பின்போது சந்திரிகா ஏற்றுக் கொண்டுள்ளார்.

அதனைவிட அமைப்பாளர் குழு, பிரச்சாரக்குழு கொள்கை திட்டமிடல் குழு ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.பிரசாரப்பணிகளில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க பிரதான பங்கைவகிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சந்தேக நபர் வீசிய பார்சலால் நீதிமன்றில் களேபரம்

கம்பஹா நீதிமன்றத்தில் கடந்த 27ஆம் திகதி சந்தேக நபர் ஒருவரை விசாரிப்பதற்காக குற்றவாளி கூண்டில் அவரை ஆஜர் செய்த பொழுது அவர் கையில் இருந்த சிறிய பார்சல் ஒன்றினை நீதிபதியின் மேசையின் மீது எறிந்துள்ளார். இதனையடுத்து நீதி மன்றத்தில் இருந்த அனைவரும் நீதிபதியும் அவர் கைக்குண்டை எறிந்து விட்டதாக கூச்சலிட்டுக்கொண்டு வெளியே ஓடினார்கள். எனினும் அந்த பார்சல் கீழே விழுந்தபோது அதில் நிறைய கழிவுப்பொருள்கள் இருப்பதை பொலிசார் கண்டு பிடித்துள்ளதுடன் நீதிபதியின் மேசைமுழுவதும் கழிவுப்பொருள் சிதறியது. இரண்டு வருடங்களுக்கு மேல் அவர் கைதாகி சந்தேகத்தின் பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவரை பிணையில் விடுமாறு பலமுறை நீதிபதிக்கு மனுச்செய்திருந்தும் பிணை மறுக்கப்பட்ட படியால் தாம் இச் செயலை புரிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


நுண்ணியல் ஆய்வுகூடம்
micro lab
கணினி இலத்திரனியல் உயர் தொழில்நுட்ப மையம்

கணினி இலத்திரனியல் பொருட்கள் சேவைகள் அனைத்தையும் ஓரிடத்திலேயே பெற்றுக்கொள்ள கிளிநொச்சி நகரில் micro lab தாயகத்தின் கணினி இலத்திரனியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பங்காளியாக நுண்ணியல் ஆய்வுகூடம்

தரவுத்தள உருவாக்கம் - Database Developement
இணையப்பக்க வடிவமைப்பு - Webpage Deceining
இணையத்தள உருவாக்கம் - Website Creating
இலத்திரனியல் சாதன உருவாக்கம் - Electronic Projects
கணினி வலையமைப்புக்கள் உருவாக்கல் - Computer Networking
(Intercom, Wireless வசதிகள் உட்பட)

செல்லிட சேவைகள்
Mobile Services

கணினி இலத்திரனியல் பொருட்களின் மலிவு விலையிலான மொத்த,சில்லறை விற்பனை

திருத்த வேலைகள்
Laptops
Parmtops
Desktop Computers
Printers
Scaners
U.P.Ses
Photocoppy Mechiens
Fax Mechiens
Etc

Service and Maintainence

AutoCad Decining
Desktop Pupletions
Photoshop applications
Digital Printouts
Coppywritings
etc

மற்றும் கணினி இலத்திரனியல் பற்றிய சந்தேகங்களிற்கான விளக்கங்கள், ஆலோசனைகள்

உங்கள் தேவைகளிற்கு எங்கள் சேவைகள்

"விரைவான சேவை ,சேவைக்குப்பிந்திய உத்தரவாதம்"

(சி-12394)


# உற்சவம்

திருகோணேஸ்வர ஆலயத்தில் அருள்மிகு ஸ்ரீ மாதுமையம்பாளின் ஆடிப்பூர பிரமோற்சவத்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகியது.தேர்த்திருவிழா ஆகஸ்ட் ஏழாம்திகதி காலை இடம்பெறும். மறுநாள் ஆகஸ்ட் எட்டாம்திகதி காலை பாபநாசத்தீர்த்தக்கிணற்றில் தீர்த்தோற்சவத்திருவிழாவும் ஆகஸ்ட் 9ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவும் இடம்பெறும் என்றும் ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. பிரமோற்சவ காலத்தில் தினமும் திருவிழா காலை எட்டு மணிக்கும் மாலை மூன்று மணிக்கும் கிரியைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். (25)

# புகையிரதத்தில் சோதனைக்கெடுபிடி

மட்டக்களப்பு- கொழும்பு சேவையில் ஈடுபடுத்தப்படும் புகையிரதங்களில் மீண்டும் படையினரின் சோதனைக் கெடுபிடிகள் ஆரம்பமாகியுள்ளன.

பயணிகளின் பிரயாணப் பைகள் மற்றும் பொதிகள் திறக்கப்பட்டு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வாழைச்சேனையில் இருந்து பொலநறுவை வரையும் இந்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வாலிபர்கள், யுவதிகள் கொண்டு வரும் பிரயாணப்பைகள் கிண்டிக்கிளறி சோதனையிடப்படுகின்றன.

கொழும்புக்கு வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே இந்தச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

# கைக்குண்டுகள் கண்டுபிடிப்பு

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயங்கேணி ஜின்னா வீதியில் தனியாருக்கு சொந்தமான காணி ஒன்றில் நேற்றுமுன்தினம் காலை 11.00 மணியளவில் இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டதாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற பொலிசார் தனியாருக்கு சொந்தமான வளவு ஒன்றில் தேடுதலை மேற்கொண்டபோது தென்னை மரத்தின் அடியில் இருந்து இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது சந்தேகத்தின் பேரில் முகமது சயிட் (வயது -39) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 31ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 14-04-1940

மறைவு 03-07-2005

திருமதி.தளையசிங்கம் சரஸ்வதி

**கடந்த 03.07.2005 இல் சிவபதமடைந்த எமது அன்புத்தாய்**

01.08.2005 திங்கட்கிழமைஅன்று அந்தியேட்டிகிரியை முல்லைத்தீவுக்கடலிலும் 02.08. 2005 செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் வீட்டுக்கிரியை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகை தந்து இவ்ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும்,அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கோ.சுந்தரலிங்கம்,
ஓடைவெளி,
நெடுங்கேணி. (6406)

தகவல்:-
**பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

## 8ஆம் ஆண்டு நினைவினிலே..

மண்ணின் மைந்தனாய் 05 - 03 - 1977



மாவீரனாய் 01 - 08 - 1997

**வீரவேங்கை ஈழத்தமிழன்**

**புத்மநாதன் மதியழகன்**


**கொக்குவில் கிழக்கு**

தளராத தலைவன் அணியிலே
ஈழத்தமிழனாக களம் கண்டவனே
உன் கனவு நனவாகும் நாள் வெகுதூரமில்லை.

திருநகர்,
கிளிநொச்சி. (6507)

என்றும் உன்நினைவுகளுடன்
**குடும்பத்தினர்**

## 45 நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**திரு. பூபாலசிங்கம் சசிகரன்**

**பரந்தன்**

அந்தியேட்டிக்கிரியைகள் 02.08.2005 ஆம் திகதி நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இரணைமடு தீர்த்தக்கரை யிலும் வீட்டுக் கிரியைகள் 04.08.2005 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அவ்வமயம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும். மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

82/1 முரசுமோட்டை
பரந்தன் (சி-12469)

தகவல்
**குடும்பத்தினர்.**

# அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இந்தியாவின் பாதுகாப்பு விடயங்கள் எதுவுமில்லை

## இந்தியப்பிரதமர் மன்மோகன்சிங்

**அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட சமரசத்தில் இந்திய நாட்டின் பாதுகாப்புப் பற்றிய விடயங்கள் எதுவும் இல்லை என இந்தியாவின் பிரதமர் மன்மோகன்சிங் அந்நாட்டுப் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.**

சமீபத்தில் அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் மன்மோகன்சிங் அந்நாட்டுடன் அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதற்கு எதிர்க்கட்சிகளும், மத்திய அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு அளிக்கும் இடதுசாரிகளும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் கடந்த வெள்ளிக்கிழமை மக்களவை மற்றும் மாநிலங்களவையில் ஆறு பக்க அறிக்கை மூலம் விளக்கம் அளித்தார் அவர் அதில் தெரிவித்திருப்பதாவது;

இந்தியாவின் வெளியுறவு நலன்களை மேம்படுத்துவதில் எனது அமெரிக்க பயணம் பெருமளவில் வெற்றி அளித்துள்ளது. உலக முன்னோடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நமது விண்வெளித் துறைக்கு பயனளிக்கும் வகையில் அமெரிக்காவுடன் நெருங்கிய ஒத்துழைப்பை உருவாக்க உதவும் அறிவியல் தொழில்நுட்ப கட்டமைப்பு ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவுடன் செய்துகொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது.

அணுசக்தி உள்ளிட்ட அனைத்து எரிசக்திகளுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெறுவதில் இந்தியாவிற்கு எந்தவித தடையும் இருக்கக் கூடாது என்பதை அமெரிக்காவிடம் வலியுறுத்தியுள்ளேன்.

இந்தியாவும், அமெரிக்காவும் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையில் உலகின் முன்னணி அணுசக்தி தொழில்நுட்ப நாடுகள் பெற்று வரும் அதே ஆதாயங்களை பொறுப்புள்ள அணுசக்தி நாடான இந்தியாவும் பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கையில் நமது இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த அணுஆயுத திட்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் எந்த அம்சமும் இல்லை. நமது இராணுவம் சாரா அணுசக்தி அமைபபுகளை சர்வதேச கண்காணிப பின் கீழ் கொண்டுவர அனுமதிக்கும் முன் இந்தியாவின் மீதான அனைத்துத் தடைகளும் கட்டுப்பாடுகளும் அகற்றப்படுவதை உறுதி செய்வோம். நமது முடிவெடுக்கும் சுதந்திரமும், தன்னிச்சையான அதிகாரமும் எவ்வகையிலும், எந்த சூழ்நிலையிலும் பாதிக்க அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மும்பையில் கடந்த வியாழன் பரவிய சுனாமி தொடர்பாக வதந்தியால் பயப்பீதியுடன் ஓடிய மக்களின் நெரிசலில் சிக்குண்டு இறந்த தன் உறவினரை மருத்துவமனை சவக்கிடங்கில் கண்டு கதறியழுகிறார் ஒரு பெண்.

## நாராயண் ராணே காங்கிரசில் இணைந்தார்

மராட்டிய மாநில முன்னாள் முதல்வரும் சிவசேனை கட்சியின் மூத்த தலைவருமான நாராயண் ராணே காங்கிரசில் இணைந்தார்.

மராட்டிய மாநில முன்னாள் முதல்வரும், சிவசேனை கட்சியின் மூத்த தலைவருமான நாராயண் ராணே அந்த கட்சியில் இருந்து கடந்த 23 ஆம் திகதி விலகினார்.

அவர் காங்கிரஸ் கட்சியில் சேரப்போவதாக கடந்த வாரம் அதிகார பூர்வமாக அறிவித்தார். இதன்பின் நாராயண் ராணே நேற்று முன்தினம் காங்கிரசில் இணைந்தார். இதற்கான விழா மும்பை திலக்பவனில் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் மராட்டிய காங்கிரஸ் முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர் நேற்று முன்தினம் மாலை நாராயண் ராணே மராட்டிய மாநில அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

## தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்

ஸ்ரீநகரின் மத்திய பகுதியில் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்திய இரு தீவிரவாதிகளை இந்திய இராணுவத்தினர்சுட்டுக் கொன்றார்கள்.

இந்திய காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகால் உள்ள பட்சா சவுக் பகுதியில் தீவிரவாதிகள் கடந்த வெள்ளிக் கிழமை திடீர் தாக்குதல் நடத்தினர். அதில் இந்தியப்படையினர் இருவர் பலியானார்கள். 25 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தநிலையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளில்இருவர் ஸ்ரீநகரின் மையப்பகுதியில் உள்ள தனித்தனி கட்டடங்களில் பதுங்கிக் கொண்டனர். நேற்று முன்தினம் காலை பொழுது விடிந்ததும் அவர்கள் படையினரை நோக்கி மீண்டும் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் அங்கு மீண்டும் பரபரப்பு ஏற்பட்டது.

பதுங்கியிருந்து சுட்ட தீவிரவாதிகள் மீது படையினர் தாக்குதலை தொடங்கினார்கள்.

24 மணிநேர தொடர் நடவடிக்கைக்குப் பின் இந்த இரு தீவிரவாதிகளையும் இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர். இதனிடையே ஸ்ரீநகரில் நடந்த தாக்குதலுக்கு ஜமைதுல் முஜாகிதின் மற்றும் அல் மன்சூரியன் இயக்கங்கள் உரிமை கோரியுள்ளன. ஸ்ரீநகரில் நான்கு தீவிரவாதிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாக அவை அறிவித்துள்ளன.

## நண்பரை சந்தித்த அப்துல்கலாம்

இந்திய சனாதிபதி அப்துல்கலாம் 1952 ஆம் ஆண்டு திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த போது அவருடன் படித்தவர் எஸ்.மாதவ அய்யா இருவரும் ஒரே விடுதியில் தங்கியிருந்து படித்தனர். அப்போது இருந்தே இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

கேரள சுற்றுப்பயணம் சென்றுள்ள சனாதிபதி அப்துல்கலாம் தனது கல்லூரி நண்பர் மாதவ அய்யரை அவரது வீட்டில் சந்திக்க திட்டமிட்டிருந்தார். ஆனால் மழை காரணமாக அங்கு செல்ல முடியவில்லை என்றாலும் தனது நண்பரை அப்துல் கலாம் சந்தித்துவிட்டார்.

கேரளாவில் உள்ள சனாதன தர்ம வித்யாசாலாவில் அப்துல் கலாம் அடிக்கல் நாட்டுவதாக இருந்தது. அநத வித்யசாலாவின் தலைவர் மாதவ அய்யர் எனவே மாதவ அய்யரை அந்த விழா மேடையிலேயே அப்துல்கலாம் சந்தித்தார். இருவரும் உணர்ச்சி பொங்க பழைய நினைவுகளை பகிர்ந்து கொண்டனர்.



ஸ்ரீநகரில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பலியான தீவிரவாதியின் உடலை இந்திய இராணுவத்தினர் தூக்கி வருவதை படத்தில் காணலாம்.

## எயிட்சைக் கட்டுப்படுத்த அன்புமணியின் ஆலோசனைகள்

எயிட்ஸ் பாதிக்காமல் இருக்க எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து கோட்பாடுகளை மத்திய அமைச்சர் அன்புமணி பட்டியலிட்டு உள்ளார்.

ஐதராபாத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு மற்றும் தொடர் நடவடிக்கைகளுக்கான இயக்கத்தை ஆரம்பித்து வைத்து மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் அன்புமணி பேசுகையில்: எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வும், கல்வி அறிவும் தான் இதற்கான சிறந்த தடுப்பு மருந்து ஆகும். எயிட்ஸ் பாதிக்காமல் இருக்க ஒவ்வொருவரும் ஐந்து கோட்பாடுகளைக் கடைபிடிக்க வேண்டும். முறையற்ற உடல்உறவைத் தவிர்த்தல், திருமணத் திற்கு முன் எச். ஐ. வி சோதனை, வாழ்க்கை துணையுடன் மட்டும்தான் உறவு, மற்றும் சரியான கருத்தடை சாதன பயன்பாடு, ஒருவருக்கு பயன்படுத்திய ஊசியை பயன்படுத்தாமல் இருப்பது, இரத்த பரிமாற்றத்திற்கு எச். ஐ. வி சோதனைக்கு உட்படுத்தப்பட்ட இரத்தத்தை மட்டும் பயன்படுத்துவது ஆகிய கோட்பாடுகளை எப்போதும் கவனத்தில் கொள்வது மிக அவசியமாகும்.

எயிட்சைத் தடுப்பதற்கும் கட்டுப்படுததுவதற்கும் மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இதற்காக தேசிய அளவில் பிரதமர் தலைமையில் தேசிய குழு ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. இக்குழுவில் மத்திய அமைச்சர்களும், மாநில முதல் அமைச்சர்களும், இத்துறை வல்லுனர்களும் இடம்பெற்றுள்ளார்கள்.

எச்.ஐ.வி பாதிப்புக்குள்ளானவர்களில் 70 சதவீதத்தினர் 18 முதல் 35 வயது உள்ள இளைய தலைமுறையினர் ஆவார்கள். இந்த இளைய தலைமுறையினரையும் மகளிரையும் காப்பது நமது உயர் முன்னுரிமையாக இருக்க வேண்டும். இவர்களுக்கு அறிவியல் பூர்வமாக தகவலை அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் எளிய முறையில் எடுத்துரைக்க வேண்டும்.

தற்போது மாவட்ட நிலையில் உள்ள ஆலோசனை மற்றும் சோதனை மையங்கள், தடுப்பு மற்றும் சிகிச்சை முறைகள் ஆகியவை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். மாவட்ட இரத்த வங்கிகளை நவீனப்படுத் துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

## சில அரசியல் கட்சித்தலைவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களை சுரண்டுகிறார்கள்

### -காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி

சில அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களை சுரண்டுவதாக சோனியா காந்தி குற்றம் சாட்டினார்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சாதிச் சான்றிதழ்கள் வழங்கும் முறையை டில்லி காங்கிரஸ் அரசு இலகுபடுத்தி அறிவிப்பு வெளியிட்டது.

அதற்கு நன்றி தெரிவிப்பதற்காக தாழ்த்தப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் டில்லியில் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியை அவரது இல்லத்தில் சந்தித்தார்கள்.

நன்றி தெரிவித்த அவர்களிடம் சோனியாகாந்தி கருத்துத் தெரிவிக்கையில்; மறைந்த டாக்டர் அம்பேத்கரின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் காங்கிரஸ் கட்சி பின்பற்றி வருகிறது.

ஆனால் அம்பேத்கர் பெயரை கூறிக்கொண்டு சில அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்களும் தங்கள் சொந்த ஆதாயத்துக்காக, சொந்த நலனுக்காக பாடுபட்டு வருகிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மலைஜாதி ஏழை மக்களை பற்றி அவர்களுக்கு கவலை இல்லை. இந்த மக்களைச் சுரண்டி அவர்கள் பிழைத்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் இந்த மக்களை திசை திருப்பியும் வருகிறார்கள் எனத் தெரிவித்தார்.



மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80 அடியை தாண்டி யுள்ள நிலையில் நீர் கொள்ளும் பகுதியில் அமைந்துள்ள வழிபாட்டுத் தலமொன்று நீரில் மூழ்கி அதன் கோபுரம் மட்டும் வெளித்தெரிகிறது.

# கே.சி.சி.சி வெற்றிக் கிண்ணத்துக்கான கடினப்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் கே. சி. சி. சி. வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ் மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையில் நடாத்திவரும் 30 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் சுன்னாகம் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் சென்றல் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணி 103 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரை இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யங்ஸ்ரார் அணித்தலைவர் தனது அணியை துடுப்பெடுத்தாட பணித்தார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 30 ஓவர் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிகூடிய ஓட்டங்களாக றஜீத் 63 ஓட்டங்களையும். சுஜீவன் 44 ஓட்டங் களையும், சதீஸ்காந்தன் 40 ஓட்டங்களையும், ஜெனிந்தன் 14 ஓட்டங்களையும் அணிக்காக பெற்றுக் கொடுத்தனர். சென்றல் அணிசார்பில் பந்து வீச்சில் கலிஸ்ரன் மூன்று விக்கெட்டுக்களையும் றஜீவ்குமார் இரண்டு விக்கெட்டுக்களையும் விமல்காந், லதுரியன், யசோ ஆகியோர் தலா ஒருவிக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

230 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்ரல் அணியினர் ஐந்து ஓவர் நிறைவு பெறுவதற்கிடையில் 14 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்தது. இதேவேளை றஜீவ்வின் நிதானமான துடுப்பாட்டத்தால் 29.1 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றது. இதில் றஜீவ்38 ஓட்டங்களையும், பாலகுமார் 15 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும், சக்தியன், விமல்காந் ஆகியோர் தலா 10 ஓட்டங்களையும், யசோதரன் ஆறு ஓட்டங்களையும் ஆகக் கூடுதலான ஓட்டங்களாக பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் சுதாகர் நான்கு விக்கெட்டுக்களை, ஜெனிந்தன் இரண்டு விக்கெட்டுக்களையும் றஜித், சதீஸ்குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் கொக்குவில் மத்திய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகமும் மோதியது. இந்த ஆட்டத்தில் ஜெனியன்ஸ் 43 ஓட்டங்களால் கே.சி.சி.சி., அணியை வெற்றி பெற்றதன் மூலம் அரை இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கே.சி.சி.சி அணித்தலைவர் தமது அணி களத்தடுப்பில் ஈடுபடுமென அறிவித்தார். இதற்கு அமைவாக முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் 27.'4' பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் நேசவர்மன் 49 ஓட்டங்களையும், சஞ்ஜீவ் 31 ஓட்டங்களையும், லிவேந்திரா 34 ஓட்டங்களையும் மதன்ராஜ் 11 ஓட்டங்களையும், நிரூபன் ஒன்பது ஓட்டங்களையும், அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.சி.சி.சி. சார்பில் ஐங்கரன் நாலு விக்கெட்டுக்களையும், பிரகாஷ் மூன்று விக்கெட்டுக்களையும், உமானாந், வினோஜான், சிற்சபேசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

174 ஓட்டம் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி தனது 21'.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அதிக ஓட்டங்களாக சசிகுமார், 22 ஓட்டமும்தயந்தன் 26ஓட்டமும், பிரகாஷ் 13 ஓட்டமும், உமானந் 12 ஓட்டமும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மதன்ராஜ் மூன்று விக்கட்டும் நிரூபன், குமணன் தலா இரண்டு விக்கெட்டுக்களும், றதீஸ், தவேந்திரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர். (கீ)

## பாடசாலை அணிகளுக்கிடையிலான மென்பந்து போட்டி இன்று ஆரம்பம்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுப் போட்டிகளில் பாடசாலை அணிகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

காலை முதல் மாலைவரை போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)

## கிளிநொச்சி மாவட்ட மெய்வன்மைப் போட்டி

கிளிநொச்சி மாவட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இரண்டு நாள் நடைபெறும் இப்போட்டியின் இறுதி நாள் போட்டிகள் இன்று நடைபெறுகின்றன.

கிளிநொச்சி மருதநகர் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் மேற்படி போட்டிகளில் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த கழகங்களின் பல வீரர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று நடைபெற்ற போட்டியில் இருபாலாருக்குமான ஈட்டி எறிதல், குண்டெறிதல், தட்டெ றிதல், நீளம், பாய்தல் உயரம் பாய்தல் போன்ற போட்டிகள் இடம் பெற்றன. இதில் பல சாதனைகளும் நிகழ்த்தப்பட்டன.

## இறுதிப் போட்டியில் வீனஸ்

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் ஸ்டான்போர்ட் டென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடக்கிறது. இத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் 2-6:7-6:6-2 என்ற செட்கணக்கில் போட்டி ஸ்கைடரை போராடி வீழ்த்தினார்.

## மைக்கல் பெல்ப்சுக்கு நான்காவது தங்கம்



உலக நீச்சல் சம்பியன் போட்டி கனடாவிலுள்ள மொன்ட்ரியலில் நடந்து வருகிறது. இதில் 4200 மீற்றர் பிரீஸ்டைல் பந்தயத்தில் அமெரிக்க அணி தங்கப்பதக்கம் வென்றது. இதன் மூலம் மைக்கல் பெல்ப்ஸ்சுக்கு நான்காவது பதக்கம் கிடைத்தது.

ஆண்களுக்கான 200 மீற்றர் பேக்ஸ்டிரோக் பந்தயத்தில் அமெரிக்க வீரர் ஆரோன் பெர்செல் ஒரு நிமிடம் 54.66 வினாடியில் கடந்து புதிய சாதனை படைத்து தங்கப்பதக்கம் வென்றார். அவர் தனது சொந்த சாதனையை தகர்த்தார்.

## வாழ்க்கையில் மறக்கமுடியாத போட்டி




நான் விளையாட ஆரம்பித்ததுமே கையில் வலி ஏற்பட்டது. வலிக்காக ஏற்கனவே ஊசி போடப்பட்டது. ஆனால் 20 நிமிடம்தான் அதுவேலை செய்தது. ஆனாலும் வலியை பொறுத்துக் கொண்டு ஆடினேன். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை எப்படியாவது வெற்றிபெறவேண்டும் என்ற வெறியுடன் விளையாடினேன். என் வாழ்க்கையில் இது மறக்க முடியாத போட்டியாகும்.

நான்தொடக்க வீரராக களம் இறங்குகிறேனா? என்பது முக்கியமல்ல. எனது அணிவெற்றிபெற வேண்டும் என்பதுதான் எனது ஒரே நோக்கம். அதை நிறைவேற்றி விட்டேன் என ஜெயசூரிய கூறினார்.

## வெற்றிதந்த ஜெயசூரிய




இலங்கை அணியின் தலைவர் அத்தப்பத்து தெரிவிக்கையில், காயம் ஏற்பட்டு இருந்ததால் ஜெயசூரியாவை நாங்கள் களம் இறக்க விரும்பவில்லை. 150 ஓட்டங்கள் எடுத்து மூன்று விக்கெட்டுக்கள் இழந்திருந்ததால் ஜெயசூரியவை விட்டு விட்டு மற்ற வீரர்களை வைத்து வெற்றி பெற்று விடலாம் என்று நினைத்தோம். ஆனால் நிலைமை மோசமாகிவிட்டதால் ஜெயசூரியவை அனுப்ப வேண்டியதாயிற்று.வலி இருந்ததால் ஊசி போட்டு அனுப்பி வைத்தோம். அவர் திறமையாக ஆடி வெற்றியை தேடித்தந்து விட்டார் என அத்தபத்து கூறியுள்ளார்.



## புது/.மத்தியகல்லூரி பொன்விழா மென்பந்து/போட்டி வித்தியா-தோழர்கள் அணிகள் இறுதிப்போட்டியில்

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட்போட்டியின் இறுதிப்போட்டியில் விளையாட வித்தியா-தோழர்கள் அணிகள் தெரிவாகியுள்ளன.

நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதிப்போட்டியில் கனகபுரம் அணியை எதிர்த்தாடிய தோழர்கள் அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கும், இரண்டாவது அரையிறுதியில் நண்பர்கள் அணியை எதிர்த்தாடிய வித்தியா அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கும் தெரிவாகின.

இறுதிப்போட்டி எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி போட்டிகளுக்கு குமார், சுபானந் ஆகியோர் நடுவர் களாக கடமையாற்றினர்.

## ஓட்டம்பெற தவறியதே தோல்விக்கு காரணம்




நாங்கள் போதுமான ஓட்டங்களை எடுக்க தவறி விட்டோம். எங்களுடைய துடுப்பாட்டம் மோசமான நிலையில் இருந்தது. நாங்கள் இன்னும் 30 ஓட்டம் கூடுதலாக எடுத்திருக்க வேண்டும். அதற்கான வாய்ப்பு இருந்தும் தவறி விட்டோம். இதனால் தோல்வியை சந்திக்க வேண்டிய தாயிற்று ஜெயசூரிய இவ்வளவு ஓட்டங்கள் எடுப்பார் என்று எதிர்பார்க்கவில்லை. அவருடைய தோள்பட்டையில் காயம் ஏற்பட்டும் கூட சிறப்பாக விளையாடியது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. உணர்ச்சிபூர்வமாக விளையாடினர். அவர் ஒருசிறந்த வீரர் என்பதைநிருபித்து விட்டார். இளம் வீரர்களுக்கு மட்டுமல்ல மூத்த வீரர்களுக்கும் அவருடைய விளையாட்டுபாடமாக அமைந்தது.


நமது பந்துவீச்சாளர்கள் மிக திறமையாக பந்து வீசினார்கள். இதேதிறமை தொடர்ந்தால் நமக்கு இனி வரும் போட்டிகளில் வெற்றியைத் தேடி தரும், என ராவிட் தெரிவித்தார்.

## ஊழல் புகாரில் இருந்து கென்யா விடுவிக்கப்பட்டது

ஊழல்புகாரில் இருந்து கென்ய கிரிக்கெட் அணியை ஐ.சி.சி.,விடுவித்தது. கென்ய கிரிக்கெட் தலைவர். மாரிஸ் ஓடும்பே கடந்த ஆண்டு ஊழல் புகாரில் சிக்கினார். இந்திய சூதாட்டக்காரருடன் இவருக்கு இருந்த தொடர்பு வெளிப்பட்டது. இவருக்கு ஐந்தாண்டு காலம் தடைவிதிக்கப்பட்டது. இவரிடம் நடந்த விசாரணையில், மேலும்பல கென்யவீரர்களுக்கு ஊழலில் தொடர்பிருக்கலாம் என்ற தகவல்வெளியானது.

இதையடுத்து சர்வதேச கிரிக்கெட்சபையின் (ஐ.சி.சி.,) ஊழல் தடுப்புப் பிரிவு கென்ய கிரிக்கெட் வீரர்கள், கிரிக்கெட் நிர்வாகிகளிடம் தீவிர விசாரணை நடத்தியது. விசாரணை அறிக்கை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. "ஊழல் தடுப்புப் பிரிவின் விசாரணை முடிவில் மொரிஸ் ஓடும்பே தவிர வேறு எந்த கென்ய கிரிக்கெட் வீரருக்கும் சூதாட்ட, ஊழல் சர்ச்சைகளில் தொடர்பில்லை என உறுதி செய்துள்ளோம்." என்று ஐ.சி.சி., தலைமை நிர்வாகி மால்கம் ஸ்பீட் அறிவித்துள்ளார். "கென்ய கிரிக்கெட்அணிக்கு இது நல்லசெய்தி. இனி மீண்டும் நாங்கள் கிரிக்கெட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவோம்." என்று கென்ய கிரிக்கெட் சங்கம் தெரியவந்துள்ளது.

## இரண்டாவது ஒருநாள் போட்டி இந்தியாவுக்கு 6 விக்கெட் வெற்றி



சிறிலங்காவில் நடைபெற்று வரும் முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியதீவு-இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டாவது போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் இரவு பகலாக நடைபெற்ற இப் போட்டியில் முதலில் ஆடிய மேற்கிற்கிந்தியத்தீவு அணி 47.4 ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 178 ஓட்டங்களை பெற்றது.


துடுப்பாட்டத்தில் டியோதரேன் 41,றாம் டீன் 24, பெஸ்ட் 24 ஓட்டங்களையும், மார்சல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பதான், சகீர்ஹான் தலா ஒரு விக்கெட்டையும் ஹர்பஜன், சேவாக், நெஹ்ரா தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இந்தியா 36 ஓவரில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ராவிட் சிறப்பாக ஆடி 52 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது, கைப் 24,றாணாட் 35 ஓட்டங்களையும் அதிகபட்ச வசமாகபெற்றனர்.

பந்துவீச்சில் லோசன் இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக ராவிட் தெரிவானார்.





## சிந்தனைக்கு

சமூக நிர்வாகத்தில் நீதித்துறை பிரதானமானது நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதி பரிபாலனத்தைக் கையாள வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01.08.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## அவர்களின் இன்றைய பிரச்சினை!

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார்? என்ற பிரச்சினை முடிவடைந்ததால் தற்பொழுது சனாதிபதித் தேர்தல் எப்பொழுது? என்ற பிரச்சினையே முதன்மை பெற்றதாகியுள்ளது. அதாவது இவ்வாண்டின் இறுதியிலா? அன்றி அடுத்த ஆண்டின் இறுதியிலா சனாதிபதித் தேர்தல்? என்ற கேள்விக்கான பதிலே அரசியல் விவகாரமாகியுள்ளது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முதலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்தவே விரும்பியிருப்பினும் தற்பொழுது எத்தேர்தலாயினும் அதை எதிர்கொள்வதற்கு கட்சியைத் தயார்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் என்றே கொள்ளமுடியும்.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக்கட்சி சனாதிபதி வேட்பாளரை தான் நியமனம் செய்ததன் மூலம் சனாதிபதித்தேர்தல் நடைபெறும் என்ற முடிவுக்கு வருதல் சற்று அவசரப்பட்ட தீர்மானமாகவும் கூட இருக்கலாம். ஏனெனில், சனாதிபதி வேட்பாளரை நியமனம் செய்த சுதந்திரக்கட்சியினரும், சனாதிபதி சந்திரிகாவும் 2006 ஆம் ஆண்டின் இறுதியிலேயே தேர்தல் என்ற நிலையில் மாற்றம் எதுவும் செய்ததாக இல்லை.

மறுபுறத்தில் , தற்பொழுதுள்ள சிறுபான்மை அரசாங்கத்தினால் 2006ஆம் ஆண்டு வரை தாக்குப்பிடிக்க முடியுமா? என்ற கேள்வியும் உண்டு. அதாவது சிறுபான்மை அரசாங்கம் மேலும் ஓர் ஆண்டிற்கு ஆட்சிபுரிய அனுமதிக்கப்படுமா? என்ற கேள்வி முக்கியமானது. ஏற்கனவே அரசாங்கத்தை அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் தோற்கடிப்போம் என்ன ஜே.வி.பி. கூறிவருகின்றது. ஐ.தே.கட்சியும் இது குறித்து அதிகம் பேசாது இருப்பினும் அடுத்த ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

ஆகையினால், சனாதிபதித் தேர்தல் தான் முதலில் நடைபெறும் என எதிர்வு கூறுவது எந்தளவிற்கு சரியானதாக இருக்கும் எனக் கூறிவிட முடியாது. ஆனால் ஒன்று சனர்திபதித் தேர்தல் முதலில் வருகின்றதோ அன்றி பின்னர் வருகின்றதோ இம்முறை சனாதிபதித் தேர்தல் விவகாரம் நீதி மன்றம் வரை சென்றே திரும்பும் என உறுதியுடன் கூறமுடியும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி, அரசியல் யாப்பின்படி இவ்வாண்டின் இறுதியில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என வலியுறுத்தி வருகின்றது. மேலும் தேர்தல் அறிவிப்பினை வெளியிட தற்போதைய அரசாங்கத்துடன் தேர்தல் ஆணையாளர் பேச்சு எதுவும் நடத்தத்தேவையில்லை எனவும் கூறுகின்றது. இவ்வாண்டில் தேர்தல் நடத்தப்படாவிட்டால் தாம் நீதிமன்றம் செல்லப் போவதாகவும் அது எச்சரித்துவருகின்றது.

சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சுதந்திரக்கட்சி, அரசியல் யாப்பின் பிரகாரம், தேர்தல் அடுத்த ஆண்டின் இறுதியிலேயே நடத்தப்படும் என்றும், தேர்தல் ஆணையாளர் அரசாங்கத்துடன் கலந்துபேசியே தீர்மானம் எடுக்கவேண்டும் எனவும் அதனையும் மீறி தேர்தல் ஆணையாளர் இவ்வாண்டில் தேர்தல் என அறிவித்தால் அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லப்போவதாகவும் தனது பங்கிற்கு எச்சரித்துவருகின்றது.

ஆகையினால், இம்முறை சனாதிபதித் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் எந்த முடிவை எடுத்தாலும் அது நீதி மன்றம் செல்லப்போவது தவிர்க்கப்படமுடியாத ஒன்றாகவே இருக்கும். அதாவது. நீதிமன்றத் தீர்ப்பே முடிவான தீர்மானமாக இருக்கும். ஆகையினால் சிறிலங்காவின்அரசியல் அடுத்ததாக சனாதிபதித் தேர்தல் எப்பொழுது ?என்பதை மையப்படுத்தியதாகவே இருக்கும் என உறுதியாகக் கூறலாம்.

இதன் விளைவானது தற்போதைய முனைப்புப் பெற்றிருந்த பிரச்சினைகளான பொதுக்கட்டமைப்பு விவகாரம், இனப்பிரச்சினை விவகாரம் என்பன பின்தள்ளப்பட்டவையாக சிங்கள ஆட்சியாளர்களால்அக்கறை காட்டப்படாதவையாகிவிடும். அதாவது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்தல், கைப்பற்றுதல் என்பதே அவர்களின் முக்கியமான பிரச்சினைகளாகிவிடும்.

ஏற்கனவே பொதுக்கட்டமைப்பு, இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு போன்ற விடயத்தில் தமதுநிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டுமென சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவிடம் பேரினவாத சக்திகள் கோரத் தொடங்கிவிட்டன. ஆனால், மகிந்த ராஜபக்ஷவோ ஆரம்பத்தில் இருந்து மௌனம் சாதிப்பவராகவே உள்ளார்.

இந்தநிலையில் சிறிலங்காவில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்குவதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிங்கள ஆட்சியாளர்களின் பார்வையில் இரண்டாம் தரப்பிரச்சினையாகிவிடும். இத்தகைய போக்குத் தொடர்ந்து அனுமதிக்கப்படுமானால் சிறிலங்கா ஆட்சியாளர்களின் அதிகாரப் போட்டிக்குள் நாமும் சிக்கிக்கொண்டதாகிவிடும். ஆகையினால் சிறிலங்காவில் நடைபெறும் தேர்தல்கள் குறித்து தீர்க்கமான முடிவுகளுடன் தமிழர்கள் பணியாற்ற வேண்டியது அவசியமானதாகும்.




# எஸ்.பி.திஸாநாயக்கவின் அரசியல் கீர்த்தியை மழுங்கடிக்கும் வகையில் அரசு செயற்பட்டுள்ளது

## -ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எஸ். பி திஸாநாயக்கவின் அரசியல் கீர்த்தியை மழுங்கடிக்கும் வகையில் அரசாங்கமும் கையூட்டல் மற்றும் ஊழல்களுக்கெதிரான ஆணைக்குழுவும் செயற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜி. எல் பீரிஸ் இந்தக் கருத்தை நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் வெளியிட்டார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் எஸ் .பி திஸாநாயக்கவை கையூட்டல் மற்றும் ஊழல்களுக்கு எதிரான வழக்கிலிருந்து விடுவித்துள்ளமை அவரின் கீர்த்திக்கு மீண்டும் புத்துயிரை வழங்கியுள்ளது. இந்த நிலையில் அரசாங்கமும் கையூட்டல் மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவும் தமது பிழையான அணுகுமுறையை நிவர்த்திக்கும் வகையில் எஸ்.பி திஸாநாயக்கவின் கீர்த்தியை பாதித்த செயற்பாடுகளை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

1994 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியினால் கையூட்டல் மற்றும் ஊழல்களுக்கெதிரான ஆணைக்குழு சட்டம் கொண்டு வரப்பட்ட போது இதன் ஒரு நோக்கமாக ஒரு அரசியல்வாதி வீணாக தண்டிக்கப்படக்கூடாது என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்ததாக ஜி.எல் பீரிஸ் குறிப்பிட்டார். (32)

## இரண்டு வார காலப்பகுதிக்குள் சூறாவளி வீசக்கூடுமாம்

(கொழும்பு)

நாட்டின் வடமேல் மற்றும் மேற்குப் பகுதிகளில் இன்னும் இரண்டு வாரகாலப்பகுதிக்குள் சூறாவளிக் காற்று வீசக்கூடுமென காலநிலை அவதான மையம் எச்சரித்துள்ளது.

காலநிலை அவதான மையத்தின் பிரதிப்பணிப்பாளர் எஸ். எச். காரியவசம் இது தொடர்பாக கருத்துரைக்கையில், இதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதாக குறிப்பிட்டார். அண்மையில் புத்தளம், வெயாங்கொட மற்றும் பகுதிகளில் வீசிய கடும் காற்று இதன் முதல் கட்டம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (32)

# இலங்கையில் மரண தண்டனை நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது

(கொழும்பு)

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள போதும் அது நடை முறைப் படுத்தப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த செவ்வாய்க் கிழமையன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற படையினருடனான சந்திப்பின் பின்னர் சனாதிபதியிடம் இது தொடர்பாக பொலிஸ் தரப்பிலிருந்து வினா எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த சனாதிபதி, ஒருவரின் மரணத்திற்காக தாம் கையொப்பம் இடப்போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் தமது பொறுப்பை தாம் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு பொறுப்பளிக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

## புகையிரத கட்டணம் 50 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

புகையிரத கட்டணங்கள் இன்று முதல் 50 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது என புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது. எனினும் பருவ கால சீட்டுக்களுக்கான அதிகரிப்பு எதிர்வரும் ஏழாம் திகதி முதலே அமுலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## அந்தமான் புவியதிர்வால் நுவரேலியா மலையில் வெடிப்பு

(கொழும்பு)

அந்தமான் நிக்கோபார் பகுதியில் ஏற்பட்ட புவியதிர்வு காரணமாக இலங்கையின் மலைப்பிரதேசமான நுவரேலியா வலப்பனையிலுள்ள மலை ஒன்றில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து வலப்பனை கிரிங்க என்ற மலையில் இருந்து பாரிய கற்கள் உடைந்து வீழ்ந்துள்ளதாக இலங்கையின் புவியதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இதேவேளை இந்தப் புவியதிர்வு காரணமாக மலைநாட்டின் பல பகுதிகளிலும் அதிர்வு உணரப்பட்டுள்ளதாக புவியதிர்வு மையம் குறிப்பிட்டுள்ளது. (32)

## கலேவெல நீர்த்தேக்கத்திலிருந்து மேலுமொரு கைக்குண்டு மீட்பு

கலேவெல நீர்த்தேக்கத்திலிருந்து மற்றுமொரு கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தேக்கத்திலிருந்து கடந்த 25 ஆம் திகதி இரு கைக்குண்டுகளும் இரு வாரங்களுக்கு முன்னர் ஒரு கைக்குண்டும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை அனைத்தும் கிறீஸ் பூசப்பட்டு பொலித்தீன் பைகளில் கட்டப்பட்டே இந்த நீர்த்தேக்கத்தில் போடப்பட்டிருந்தன. தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர்த்தேக்கத்தில் நீரின் மட்டம் குறைவடைந்து வந்ததாலேயே இந்தப் பைகள் மீன் பிடிப்பவர்களுக்குக் கிடைத்தாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சனாதிபதித் தேர்தலை நடத்துமாறு சந்திரிகாவுக்கு அழுத்தம் கொடுப்பது உரிய செயலல்ல

## பிரதமர் மகிந்தராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலை நடத்துமாறு சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஐக்கிய தேசியக்கட்சியினர் அழுத்தம் கொடுப்பது உரிய நடவடிக்கை இல்லை. சனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் தினத்தை தேர்தல் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும் எனப் பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நாற்பது வருட அரசியல் வாழ்க்கையை நினைவு கூரும் வைபவத்திலேயே பிரதமர் இந்தக் கருத்துக்களை தெரிவித்தார்.

சனாதிபதித் தேர்தலை நடத்துங்கள் என்று சனாதிபதிக்கு சொன்னால் அதில் பயனில்லை.

ஏனென்றால் சனாதிபதித் தேர்தல் குறித்து தெளிவு படுத்திக்கொள்ள தேர்தல் ஆணையாளரை கேட்க வேண்டிய உயர்ந்த அமைப்பு உயர் நீதிமன்றமே என அரசியல் அமைப்பில் மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பில் ஏற்படும் சந்தேகங்களை தெளிவடையச் செய்வதற்கான அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கே இருக்கின்றது.

இது குறித்து நாங்கள் அநுராதபுரத்தில் வைத்து சொன்னது அவர்களுக்கு ஞாபகம் இல்லை. அதன் பின்னரே தேர்தல் ஆணையாளருக்கு சொன்னார்கள். சனாதிபதி இதனையே நடத்த வேண்டுமென கோரியே பேரணியை நடத்தினார்கள். ஆனால் தேர்தலை நடத்துவது ஆணையாளரதும் உயர்நீதி மன்றத்தினதும் கடமை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற அடிப்படையில் 2005 ஆம்ஆண்டிலோ அல்லது 2006 ஆம் ஆண்டிலோ அல்லது இன்றோ நடத்தினால் நாம் தேர்தலுக்கு தயாரென ஐ.தே.கட்சிக்கு கூறவிரும்புகின்றோம்.

எனவே அரசியல் அமைப்பின் படி தேர்தலுக்கான தினம் தீர்மானிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# சனாதிபதி, பிரதமர் வேட்பாளர் பதவிக்கு தகுதிவாய்ந்தவன் நானே- டி.எம்.ஜெயரட்ன

(கொழும்பு)

சனாதிபதி வேட்பாளரானாலும், பிரதமர் வேட்பாளரானாலும் இவை இரண்டிற்குமே தகுதிவாய்ந்தவன் நானே என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த பிரதமர் வேட்பாளராகும் எதிர்பார்ப்புடன் கட்சியில் இருந்த பலில் நீங்களும் ஒருவர்தானே என்று ஊடகவியலாளர்களால் அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரதமராகும் எதிர்பார்ப்புடன் பலர் பார்த்துக் கொண்டிருந்திருக்கலாம். எனினும் முடிவில் யாராவது ஒருவர்தானே தெரிவு செய்யப்படுவார். சரியாகச் சொல்வதாயின் சனாதிபதி வேட்பாளரென்றாலும் பிரதமர் வேட்பாளரென்றாலும், அதற்கு தற்போது தகுதி வாய்ந்தவன் நானே . இது பற்றி சனாதிபதி எனக்கு உறுதியளித்துமுள்ளார்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்கவை பிரதமராக்கிய போது அம்புலுவாவேயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்ட சனாதிபதி என்னிடம் வந்து , இந்த நேரத்தில் பிரதமராக நியமிக்க வேண்டியது உங்களைத்தான். அதற்கு தகுதியானவரும் நீங்கள் தான். ஆனால் ரட்ணசிறி விக்கிரம நாயக்க சுகவீனமுற்றிருப்பதால் எனக்கு என்ன செய்வதென்று தெரியாமல் உள்ளதெனத் தெரி வித்தார்.

அப்போது நான் அவருக்கு சொன்னேன்.பரவாயில்லை. இந்தத் தடவை ரட்ணசிறிக்கு வழங்குங்கள். அடுத்த முறை எனக்கு வழங்குங்கள் என்றேன். ஆனால் இம்முறை மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டுள்ளது. நான் பதவிகளின் பின்னால் அலைபவன் அல்ல என்பதால் இவற்றைப் பற்றிக் கவலைப்படுவது மில்லை என அமைச்சர் டி.எம் ஜெய ரட்ன தெரிவித்துள்ளார்.

சானதிபதித் தேர்தலில் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அவர்கள் எப்படியும் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிக்க மாட்டார்கள் எனக் குறிப்பிட்ட அமைச்சர். ஜே.வி.பியினர் தனியாக ஒருவரை சனாதிபதி வேட்பாளராக நியமித்தால் எங்களுக்கு தற்காலிகமாக நட்டம் ஏற்படும். ஆனால் ஜே.வி.பிக்கு நிரந்தரமான நட்டம் ஏற்படும். அதனால் ஜே.வி.பி நன்கு சிந்தித்தே இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஜே.வி.பி ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு எதிராகக் கொண்டுசெல்லும் போராட்டம் வெற்றிகரமாக அமையவில்லை. அவர்களின் எதிர்ப்பினை மக்கள் பொருட்படுத்துவதில்லை. இந்த ஆர்ப்பாட்டங்கள் கொழும்பு கோட்டையிலும், லிப்டன் சுற்று வட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் மட்டுமே நடத்தப்படுகின்றன. அதற்கு அப்பால் கிராமங்களில் இந்தப் போராட்டங்கள் இல்லை. கிராம மக்கள் அவற்றைப் பொருட்படுத்துவதுமில்லை. அவர்களுக்கு இவற்றைவிட முக்கியமான வேறு விடயங்கள் உள்ளன.

சனாதிபதி தனது பதவிக்காலம் முடிந்த பின்னரும் அரசியலிலிருந்து ஓய்வுப்பெறமாட்டார். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள அனைத்துத் தேர்தல்களுக்கான நடவடிக்கைகளையும் அவரே மேற்கொள்வார். அவர் கட்சியின் தலைவியாக தொடர்ந்தும் இருப்பார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சனாதிபதித் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் போட்டியிடுமா, கை சின்னத்தில் போட்டியிடுமா அல்லது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுமா என்பது பற்றி இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் டி.எம் ஜெயரட்ன. சனாதிபதித் தேர்தல் நெருங்குகையில் அதுபற்றி முடிவு செய்வோம், ஜே.வி.பி மீண்டும் இணைந்து கொண்டால் எங்களால் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் போட்டியிடமுடியும். பொதுசன ஐக்கிய முன்னணியின் கதிரைச் சின்னத்தை எமக்கு எப்போது வேண்டுமானாலும் பெறமுடியும்.

பொதுசன ஐக்கிய முன்னணி என்ற வகையில் நாம் உறுதியான நிலையில் இருக்கிறோம். நாம் கைச் சின்னத்தில் போட்டியிட்டாலும் பொதுசன ஐக்கிய முன்னணியில் இருப்பவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என அமைச்சர் டி.எம் ஜெயரட்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# தனியார்துறை பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபா வேதன உயர்வு அமுல்

(கொழும்பு)

தனியார் துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கான ஆயிரம் ரூபா வேதன உயர்வு அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்ட பிரேரணையின் போது அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட இந்த வேதன உயர்வின் மூலம் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் 70 இலட்சம் ஊழியர்கள் பயனடைவர் என தொழில் அமைச்சின் செயலாளர், மகிந்த மதிகஹேவா தெரிவித்துள்ளார்.இந்த வருட ஆரம்பத்தில் தொழில் அமைச்சர் அத்தாவுடா செனவிரட்னவினால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு கடந்த மாதம் அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

(32)

### -சிறிலங்கா சனாதிபதித் தேர்தல் குறித்த

# அவுஸ்திரேலியப் பிரதமரின் கருத்துக்கு சட்டக்கல்லூரி மாணவர் ஆட்சேபம்

(கொழும்பு)

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹொவாட்டினால் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் குறித்து கொழும்பு சட்டக்கல்லூரி மாணவர்கள் தமது ஆட்சேபனையை வெளிப்படுத்தியுள்ளனர்.

தமது ஆட்சேபத்தை தெரிவிக்கும் வகையிலான மனு ஒன்றை அவுஸ்திரேலியப் பிரதமருக்கு அனுப்பும் நடவடிக்கைகளை இந்த மாணவர்கள் தற்சமயம் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையின் சனாதிபதித் தேர்தல் இந்த வருடத்தினுள் நடத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக சட்டக் கல்லூரி மாணவர் சங்கத்தின் தலைவர் ரவீந்திர மயூரரங்க கருத்து தெரிவிக்கையில், அவுஸ்தி ரேலியப் பிரதமர் ஜோன் ஹெவாட் தெரிவித்திருக்கும் கருத்துக்கள் இலங்கையின் சட்ட வரையறைகளை மீறும் செயலாகும். அத்துடன் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் இந்த விடயத்தை நாம் கடுமையாக ஆட்சேபிக்கின்றோம். எமது சங்கத்தின் ஆட்சேபத்தை எதிர்வரும் மூன்றாம் திகதி இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவரின் ஊடாக அவுஸ்திரேலியப் பிரதமருக்கு அனுப்பி வைக்க தீர்மானித்துள்ளோம் என்றார்.

(32)

# சனாதிபதித்தேர்தல் அறிவிப்பு இருவாரத்தில் வெளியிடப்படும்?

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தல் திகதி தொடர்பில் தேர்தல் ஆணையாளர் இந்த மாதத்தில் அறிவித்தலை விடுக்கவுள்ளார். இந்த அறிவித்தல் எதிர்வரும் இரண்டு கிழமைகளுக்குள் விடுக்கப் படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் திணைக்கள தரப்புகளின் படி எதிர்வரும் நவம்பர் மாதம் 22 ஆம் திகதியின் முன்னர் சனாதிபதித் தேர்தல் நடைபெறுதல் வேண்டுமென கூறப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தல் சட்டம் மற்றும் அரசியலமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தேர்தல் திணைக்களம் தற்சமயம் சனாதிபதித்தேர்தல் தொடர்பில் அஞ்சல் வாக்காளர் அட்டைகளை அச்சிட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் நடவடிக்கை குழு இன்றைய தினம் கூடி தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயவுள்ளது. (32)

# சனாதிபதித் தேர்தல் பிரசாரம்; சு.க செப்ரெம்பர் ஆறில் ஆரம்பிக்கும்

சிறிலங்கா சுதந்திர கட்சியின் சனாதிபதித் தேர்தல்பிரச்சாரம் உத்தியோகபூர்வமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. சனாதிபதி தமது சீனாவிற்கான விஜயத்தை நிறைவுசெய்த பின்னர் இந்தப் பிரச்சாரம் ஆரம்பிக்கபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே ஐக்கிய தேசிய கட்சியின் சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தம்துபிரச்சாரப் பணிகளை முன்னெடுத்துச்செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை சிறிலங்கா சுதந்திர கட்சியின் சனாதிபதி வேட்பாளரான பிரதமர்மஹிந்த ராஜபக்ஷவுக்கு தாம் ஆதரவு வழங்க வேண்டுமரனால் அவர் ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதற்கு முன்வரவேண்டுமென ஜே .வி.பிகோரியுள்ளது.

(32)

# டெங்குநோய்த் தாக்கம்

மாத்தறைப் பகுதியில் டெங்கு தொற்றுக்கு உள்ளான மூவர் இனம் காணப்பட்டுள்ளதாக தென்மாகாண பிரதி சுகாதார சேவைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.பருவ மழையை அடுத்து டெங்கு நோயின் தொற்று, கடந்த சிலவார காலப்பகுதியில் 25 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நோயை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்கில் மக்களிற்கு புரிந்துணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கு, பல தொண்டர் ஸ்தாபனங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(32)

## பாதுகாப்புக் குறித்த...

இந்தவிசேட கூட்டம் நடைபெற்ற மறுநாளான 27 ஆம் திகதி புதிய யோசனைகளை கண்காணிப்புக்குழு கிளிநொச்சிக்கு அனுப்பியது. எனினும் இதுவரை அவர்களிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லை என ஹெலன் குறிப்பிட்டார்.

புதிய யோசனைகளில் பாதுகாப்பு அதிகரிப்பு மற்றும் உத்தரவாதமளித்தல் ஆகிய விடயங்கள் அடங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் மேலதிக விபரங்களை வெளியிட மறுத்துவிட்டார்.

அரச தரப்பிற்கும் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவிற்கும் இடையே வெள்ளியன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த கூட்டம் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்ருப் ஹொக்லண்ட்டின் நோர்வே விஜயத்தினால் இரத்துச் செய்யப்பட்டது.

விடுதலைப்புலிகளின் பதில் கிடைக்காத விடத்து ஹொக்லண்ட் வரும்வரை வேறு சந்திப்புக்கள் எதுவும் அரச தரப்புடன் நடைபெறமாட்டாது என்றும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்களைச் செய்ய வேண்டும் என உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இருசாராரும் உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்காமையினால் உடன்படிக்கையில் மாற்றங்களைச் செய்வது தொடர்பில் கண்காணிப்புக்குழு கவனம் செலுத்தாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இருசாராரும் அதனை மேற்கொள்ளுமாறு உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்க வேண்டுமே தவிர ஒருதரப்பு மாத்திரம் வேண்டகோள் விடுப்பது போதுமானதல்ல எனவும் அவர் கூறியுள்ளார்.

## நெலுக்குளத்தில்....

தி.சோபனா,பி.அனோமா பி.கோ.விந்தம்மா, எஸ்.பூபதி, எஸ். ராஜேஸ்வரி, எஸ்.காளிமுத்து ஆகியோர் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் பேருந்து ஓட்டுநரும் காயமடைந்து மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## யுத்தத்திற்கு...

பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்ததோடு ஆலோசனையையும் வழங்கியுள்ளனர்.

இந்தவகையில் ஆயுதப் படைத்தரப்பையும் பலப்படுத்த அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள். போக்குகள் அரசாங்கம் யுத்தத்தைநோக்கிச் செயற்படுவதான சந்தேகத்தை உச்சநிலையை அடையவைத்துள்ளது.

விடுதலைப்புலிகள் மீது மறைமுகப் போர் ஒன்றைத் தொடுத்துள்ள அரசாங்கம், விரைவில் முழு அளவிலான யுத்தம் ஒன்றுக்குத் தயாராகி வருவதாகவே கருத வேண்டியுள்ளது.

## பலாலி ....

பலாலி வானூர்தி ஓடுபாதையில் வானூர்திகள் தரையிறங்கும் போது ஏற்படும் அதிர்வுகளை அடுத்தே அந்த வானூர்தி ஓடுபாதை புனரமைக்கப்படவுள்ளது.தற்சமயம் யாழ்ப்பாணத்துக்கு நாள் ஒன்றுக்கு ரஷ்ய தயாரிப்பான அன்டனோவ் 32 ரக வானூர்திகள் மூலம் சுமார் 750 படையினர் ஏற்றியிறக்கப்படுகின்றனர்.

இந்த நிலையில் படையினரின் ஏற்றியிறக்கலுக்காக பயன்படுத்தப்படவுள்ள எம் ஐ 26 ரக உலங்கு வானூர்தி ஒன்றின் மூலம் ஒரு தடவையில் 95 பேரை ஏற்றியிறக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமானோரை கப்பல் மூலம் அழைத்துச்செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.